# தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்



Best copy available.

# எண்ணம்

## கண்ணதாசன்

ஜான்சன் என்னும் ஆங்கில ஆசிரியனைப் பற்றி நண்பர்கள் அறிவார்கள். அவன் திமிர்பிடித்தவன் என்று சிலர் கூறுவர். "சரக்கு இருப்பதனால் அவன் அந்தத் திமிரை தைரியமாக வெளிக்குக் காட்டிக்கொண்டான்" என சிலர் சமாதானம் கூறுவர். ஒன்று உண்மை. அவன் "தானே தனக்கு நிகர்!" என்று வாழ்ந்தான். ஒரு முறை, அவன் எழுதிய ஒரு நூலைப்பற்றி, பல ஆங்கில விமரிசகர்கள் தாக்கி எழுதினர். ஜான்சன் பதில் எழுதாமல் வாய்மூடி மௌனியாக இருந்தான். அது பற்றி அவனது நண்பர்கள் சிலர், "நீங்கள் பதில் எழுத வேண்டும்" என்று வற்புறுத்தினர்கள். அதற்கு ஜான்சன் சொன்ன பதில் இது:

"என்னைத் தாக்குகிறவர்கள் பெரிய எழுத்தாளர்களாக இருக்கலாம்; ஆனால் என் வரையில் அவர்கள் சாமானியர்கள். நாளைக்கு அவர்கள் செத்துப்போவார்கள்; அதோடு அவர்கள் எழுதிய நூற்களும் செத்துப்போகும். நான் செத்தாலும் என் எழுத்துக்கள் நிலைத்து நிற்கும். என் எழுத்துக்களில் அவர்களது பெயர்கள்வந்தால், எதிர்காலத்தில் மக்கள், "ஓகோ! இப்படிச் சிலர் இருந்திருக்கிறார்கள்" என்று தெரிந்து கொள்வார்கள்: அவர்களுக்கு இந்தவிளம்பரமுமா நான் தரவேண்டும்."

* * *

இது திமிர் என்றால், இந்த திமிர் என்னையும் பிடித்திருக்கிறது என்பதைத் தாழ்மையோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் ஜான்சன் அல்ல, மிகமிகச் சாமானியன் ஆனால் சாமானியர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட சிறப்பில் திமிர் வரலாமல்லவா? விஷயம் இதுதான். சத்தம் கூடப்புக முடியாத இடங்களிலெல்லாம் தென்றல் புகுந்து விளையாடி வருகிறது. இதன் புதுமை பற்றி நண்பர்கள் எழுதிக் குவித்து அனுப்புகிறார்கள். சிங்கப்பூரிலிருந்து ஒரு நண்பர் பதினெட்டுப்பக்கங்களில் ஒரு பாராட்டுக் கடிதம், விமர்சனமாக அனுப்பியுள்ளார். எதிர்க்கட்சி நண்பர்கள் பல பேர் பாராட்டி எழுயுள்ளனர் அத்தனை கடிதங்களையும் வெளியிடலாமா என்றுகூட எண்ணுகிறேன்; ஆனால் பக்கங்கள் போதாதே!

* * *

கடந்த இரண்டு வாரங்களில் தென்றல் ஒருநாள் காலதாமதமாக வெளிவந்ததுபற்றி நண்பர்கள் குறிப்பிட்டு எழுதியுள்ளனர். மிகவும் வருந்தத்தக்கசெய்திதான். பத்திரிகை ஒழுங்காக வரவேண்டும் என்பதில் அதிக அக்கரை கொண்டவன் நான். என்னையும் மீறி ஒருநாள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இனி ஒரு நாள் முன்னதாகவே இதழ் கிடைக்கும். இயக்கப் பிரசார சுற்றுப் பயணத்திலும், பல திருமணக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு பணியாற்றியதும், அச்சக சம்பந்தமானதும், இடமாற்ற சம்பந்தமானதுமான அலுவல்களை கவனிக்க வேண்டியிருந்ததும் முக்கிய காரணங்களாகும். இனி அத்தனையையும் கவனித்து பத்திரிகையையும் ஒருநாள் முன்னதாகவே கொண்டுவர ஏற்பாடு செய்துள்ளேன்.

* * *

தென்றலுக்கு தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்களின் அறிவார்ந்த ஒத்துழைப்பு முழுக்க முழுக்கக் கிடைக்கிறது. தோழர் சம்பத், காரியமாற்றும் வீரர். எதையும் செயல்படுத்தும் முறையில் மிகமிகத் தெளிவானயோசனைகளைக் கூறக் கூடியவர். அவர் தென்றலுக்கு ஒத்துழைப்பதற்காகவே, ஈரோட்டிலிருந்து சென்னை வந்திருந்தார். ஆனால் வந்தஅன்று ஜுரத்தால் பீடிக்கப்பட்டு அன்று இரவே ஈரோடு செல்ல வேண்டியவராகிவிட்டார். இந்த மலரில் "கவிஞனும் தத்துவமும்" என்ற தலைப்பில் எழுதுவதாக இருந்தார். ஆனால், ஜுரம், வாசகர்களுக்கு அந்த விருந்து கிடைக்காமல் தடுத்து விட்டது. இனி பெரும்பாலும் அவரது எழுத்துக்கள் தென்றலில் அடிக்கடி வெளிவரும்.

* * *

இந்த மலரை நான் நினைத்திருந்த அளவுக்கு வெற்றிகரமாகக் கொண்டுவரவில்லை யென்றே கருதுகிறேன். பல படங்கள் 'டிசைன்' கோளாறினால் ஒன்றும் செய்யமுடியாமல் பாழாகி விட்டன. அவற்றைச் சீர்படுத்தும் வேலை குறித்தகாலத்தில் முற்றுப் பெறாததால் அதிகப் படங்கள் வெளியிடமுடியவில்லை. ஆனால் நம் இயக்கநண்பர்கள் வெறும் படம் பார்க்கும் ரசிகர்களல்லவே! அவர்களுக்கு நல்ல கட்டுரைகள் கிடைத்தால் போதுமே! இதோ! அது இந்த மலரில் நிறைய இருக்கிறது.

* * *

"ஆயிரம் தீவு அங்கையற்கண்ணி" என்னும் தொடர் கதை அக்டோபர் 16-ம் தேதியிலிருந்து தென்றலில் வெளிவரும். கடல் கடந்து சென்ற சோழன் ஒருவனின் காதற் சித்திரம் அது. அதனை சுவையான காதற் கதையாகத் தருவது எனது கடன் வரலாற்று ஆதாரங் கொண்ட இந்தக் கதையை நான் மனப்பூர்வமாக எழுதும் முதல் பெருங் கதையாக நினைக்கிறேன். நீங்கள் படித்துவிட்டு எழுதுங்கள். அக்டோபர் 16-ந்தேதி மறந்து விடாதீர்கள்.

* * *

பெரும் பயணத்திற்குத் தேவையான ஆதாரங்கள் கிடைத்து விட்டன. 25-9-54ந் தேதி இதழிலிருந்து மீண்டும் துவங்கும். 'இலக்கியத்தில் காதல்' தொடர்ந்து வரும். 'தென்றல்' சொந்த அச்சகத்திலிருந்து வெளிவரும். இனி வாசகர்கள் வாரந்தோறும் புதுமையை எதிர்பார்க்கலாம்! வெண்பாப் போட்டி வைத்து ஈற்றடி கொடுத்து, முழுப்பா எழுதக்கோரி, பரிசு வழங்கவும் நினைக்கிறேன். கணக்குப் போட்டுப் பார்த்து, நஷ்டம் ஆளை விழுங்கி விடாது என்று தெரிந்தால், பக்கங்களை அதிகப்படுத்தக் கூட உத்தேசம் இருக்கிறது.

* * *


நண்பர்களது ஒத்துழைப்பு தொடர்ந்து கிடைக்கும் என்று எதிர்பார்த்து, உரிமையோடு அதைக் கேட்டுக்கொண்டு, இந்த பாரதி மலரை உங்களுக்குத் தருகிறேன்.

---

**இதன் மூன்றும் பக்கத்து நடு அமைப்பில் இருக்கும் சிறு கட்டுரையை எழுதியவர், முகவை மு. பாண்டியன்.**

---

**தென்றல்**
புதிய முகவரி
13 நல்லண்ண முதலி சந்து
ராயப்பேட்டை
சென்னை-14.



முன் இதழ் தொடர்ச்சி

# காதற்கள்ளன்

புலவர் ஏ. கே. வேலன்

ராஜேந்திரன்--தன் வெற்றியின்சின்னமாக--தஞ்சை ராஜராஜேஸ்வரம் போல், தன் பெயரால் அங்கொன்றும் நிறுவினான். வடக்கே உள்ள கங்கையும் தனக்குச் சொந்தம் என்பதை உறுதிப் படுத்த— சோழகங்கம் என்ற தொரு ஏரியை அடைத்தான்-அதிலே நிரப்புவதற்கு தோற்றவடவர்களின் தோள்களிலே கங்கை வெள்ளத்தைக் குடம் குடமாய்க் கொண்டு வரச் சொன்னான், என்ற சேதியெல்லாம் வழங்குகிறது.

அரசன் அமைத்த ஆலயத்தில் இந்துமதி எவரும் ஏற்பாடுசெய்யாமலேயேஆடினாள் ஆலயத்தில் ஆண்டவன் முன்னிலையில் மட்டும் ஆடவில்லை சோழ நாட்டு சுந்தர வாலிபர்களின் மன அரங்கு தோறும் ஆடினாள்! "ஊருக்குகொரு புதியவள்! அவள் கூப்பிடாமலே கூத்தாடுகிறாள்." என்ற சேதி எங்கும் பரவிற்று. இராஜேந்திரன் செவிக்கும் எட்டியது! அவளுக்கு அன்பளிப்பு காணிக்கை- என்னென்னவோ யார் யாரோ அனுப்பி வைத்தனர். எதையும் அவள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவளுடைய காதலுக்காக மாவீரர்களெல்லாம் தவங்கிடந்தனர். எவர் வலையிலும் அவள் விழவில்லை. ஆயினும் அவளுடைய ஆடலும் பாடலும் நாளும்நடந்தபடியேயிருந்தன. அவளைப் பற்றிய வதந்தி ஒன்றுக்குப் பலவாக ராஜேந்திரன் செவிக்கு எட்டியது. அவளைத்தன்அவையில் அழைத்து ஆடவைக்க விரும்பினான். அவளோ மாதேவன் முன்னிலையில் அல்லாமல் மன்னன் முன் ஆடுவதற்கில்லை என்று மறுத்து விட்டாள். அப்படித்தன் ஆட்டத்தைக் காண விரும்பின் தான் ஆடும் இடத்தில் வந்து காணட்டும் எனச் சொல்லிவிட்டாள்.

அவளுடைய அந்த மறுதளிப்பைக் கேட்டதும், மன்னனுக்குநேரில் அவளைக்காண வேண்டுமென்ற எண்ணம் பிறந்தது. அதற்காக அவள் ஆடும் இடத்திற்குச் செல்வதோ அவளிருப்பிடத்திற்குச் செல்வதோ தன் அந்தஸ்த்திற்குத் தக்கதல்ல என்பதால் செல்லத் துணிவில்லை.

ஒருநாளிரவுமன்னன்அரண்மனையில் உறக்கமின்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். வானங் கருத்து சிறு தூறலாய் துளிர்த்துக்கொண்டிருந்தது. இன்று இந்துமதியைப் பார்த்துவிடவேண்டும் என்ற முடிவில் மாறு வேடத்தில் வெளியில் புறப்பட்டான்.

மெய்க்காவலர்களையும் அழைக்காமல்...! ஒரு கள்ளனைப் போல். இந்துமதியின் வீட்டு மச்சேறி உள்ளே குதிக்க இடம்பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் எதிர்பாராத நிலையில் இந்துமதி ஏணிகொண்டு வந்து சாத்தினாள். மன்னன் திடுக்கிட்டுப்போனான்! திரும்பி ஓடவும் முடியவில்லை-உள்ளே இறங்கவும் துணிவில்லை.

"ஏன் விழிக்கிறாய், துணிவற்றவனுக்குஇந்தவேலைஏன்? நேராக வந்து கதவை இடித்திருந்தாலும் திறந்திருப்பேன். எதற்காக வந்தாய்? உனக்கு என்ன ஆகவேண்டும்?" என அலட்சியமாக விசாரித்தாள். மன்னனும் வெறுவழியின்றி அவள் விடுதிக்குள் இறங்கினான்!

"நான் ஒரு கள்ளன் என்று தெரிந்தும் உனக்குப் பயம் தோன்றவில்லையா" என விசாரித்தான் வேந்தன்.

"ராஜேந்திரன் ஆட்சி அவ்வளவு சீர்கெட்டுப் போகவில்லை, அவனரசில் ஒரு அபலைக்குத் துன்பந் தரக்கூடிய எவனும் இருக்கமாட்டான் என்று நம்புகிறேன்" என்று பதிலளித்தாள். அந்த விடையால் அவனுடல் புல்லரித்தது மழையில் நனைந்து வந்த மன்னன் மருண்டே போனான்! தன்னை இன்னாரென்று கண்டு கொண்டாளோ என்று.

பின்னர்-அவளுடையஆடற்கலையைப் பற்றி அளவளாவினான்! மெள்ள பேச்சை வளர்த்து "இன்னும் ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?" என்று கேட்டேவிட்டான்.

"ஆசைப்படாத ஆண்மகனில்லை: ஆனால் அவர்களில் எனக்கேற்றவன் எவனுமே இல்லை" எனத் துடுக்காகப் பதிலளித்தாள்.

அதைக்கேட்டதும் மன்னனுக்கு ஆயிரந் தேள்கள் கொட்டியது போலிருந்தது. எங்கிருந்தோவந்த இனந்தெரியாத நாடோடிப் பெண்ணுக்கேற்ற காளை சோழமண்ணிலேயே கிடையாதா என்ற கோபஉணர்வு பொங்கிற்று. என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்" என்று சுடச்சுட கேட்டான்.

"உடனடியாக சொல்வதற்கில்லை. கொஞ்சநாள்என்னோடு பழகு. உன் குணமும், ஆற்றலும் அறிந்து விடை சொல்கிறேன்" என மிகச் சாதாரணமாகச் சொன்னாள்.

மன்னனுக்கோ அந்தவிடை எரிநெருப்பாகச்சுட்டது. எப்படியும் அவளை அடைந்தே தீருவது என்று முடிவு கட்டினான்!, அவளுக்காக பன்னாள் கண்விழித்தான். ஊர் உறங்கியதும் யாரும் அறியாதபடி அவளைசந்திப்பதும், சரசமாடுவதுமாக இருந்தான். அவளும் தன் ஆடலாலும், பாடலாலும் அவனை வெறி கொள்ளச் செய்தாள். ஆயினும் காதல் மட்டும் புரியவில்லை!

மன்னனின் காதல் அணை கடந்து விட்டது. அவளுக்காக அவன் எதையும் செய்யத் தயாரானான். அவளுடைய அன்புக்காக மண்டியிட்டான்! கடைசியாகச்சொன்னாள், காதலுக்கு ஒரு நிபந்தனைஉண்டென்றும், அதனை நிறைவேற்றும் ஆற்றல் படைத்தோன் என்ற நம்பிக்கை வந்த பின்தான் என்றும்.

மன்னன் துடிதுடித்தான் "உடனே நிறைவேற்றுகிறேன். எவர் தலை உன் காலடியில் உருளவேண்டும், எந்த மண்டலம் உனக்குகாணிக்கையாகவேண்டும், வானத்து நிலவைப் பந்தாட வேண்டுமா? சொல் இதோ கொண்டு வருகிறேன்" எனஅவசரப்பட்டான்.

அவனுடைய மோக வெறியில் தன் விருப்பத்தை முடித்துக் கொடுப்பான் என மகிழ்ந்து "மன்னன் ராஜேந்திரனைப் பழிவாங்கவேண்டும், வங்கத்தின் சுதந்திரம் மீட்கப்படவேண்டும். அவன் நெஞ்சிலே பாச்சுவதற்காக அனங்கபாலனின் வைரக் கத்தியோடு வந்திருக்கிறேன்" என வங்க மன்னன் முத்திரை பதித்த வைரக்கத்தியைக்காட்டினாள். அவளுடைய வஞ்சகத்தைக் கேட்டு ராஜேந்திரனின் உடல் அதிர்ந்தது. இரத்த ஓட்டம் சிறிது நேரம் உறைந்தே போயிற்று! அவளுடைய இதயத்தில்கொழுந்துவிட்டெரிந்த தேசபக்தியைக் கண்டு திகைப்பு அதிகமாயிற்று.

அவள் மன்னனின் மன அதிர்ச்சியைக் கண்டு மெல்ல நகைத்து "ஏன் ராஜத்துரோகம் செய்ய விரும்பவில்லையா எப்படி முடியுமென அஞ்சிக் கோழையாகி விட்டாயா? இந்த இந்துமதி ஒருநாளும் கோழையின் காதலியாகமாட்டாள்; போ வெளியே!' என அதட்டினாள்.

ராஜேந்திரன் ஒருவாறு தெளிவுற்று "கொடுகத்தியை ராஜேந்திரன் நெஞ்சிலே பாய்ச்சுகிறேன்" எனக் கத்தியைப் பறித்தான். அவள் விடவில்லை, "உன்மீதுஎனக்கு நம்பிக்கை இல்லை. அச்சத்தால் நீயும்சாவாய் என்னையும் காட்டிக் கொடுத்து விடுவாய். நடுங்கும் உன் விரல்களுக்கு இதைப் பிடிக்க போதிய வலி

---

மலரின் தேனை சுவைத்த வண்டு பறந்து செல்வதைப் போல் — பெண்களைத் தங்கள் இன்பப் பதுமைகளாக இளமையில் படாதபாடு படுத்திய பட்டினத்தார், அருணகிரிநாதர் போன்ற பெரியவர்கள் — கசங்கிய மலரானவுடன், சாகப்போகிற நேரத்தில் சஞ்சலத்துடன் பெண்களைப்பற்றி இத்தகைய இழிவான பாடல்களை இந்த நாட்டில் பாடி ஆண்களின் ஆணவத்தை அதிகரிக்கச் செய்து ஆண்களுக்கோர் நீதிகூறி பெண்களை அடிமையாகச் செய்த ஆணவக்காரர்களை எதிர்த்து. "பெண்மைக்குப் பெருமை அளிக்கவேண்டும்"என்றும் "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழவேண்டும்" என்றும் அமுத மொழியில் முதன் முதலில் முழக்கமிட்டவன். புதுமைக் கவிஞன் புதுநெறி காட்டிய புலவன் பாரதி தான் !

நாட்டில் அரசியல் பொருளாதார விடுதலைபற்றி மேடைகளில் முழங்குபவர்களைப் பார்த்து பாரதி பேசுவதைப் பாருங்கள்.

"விண்ணுக்குப் பறப்பதுபோல் கதைகள் சொல்வீர்
விடுதலை யென்பீர் கருணை வெள்ள மென்பீர்
பெண்ணுக்கு விடுதலைநீர் இல்லையென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை"—என்கிறார்

மையில்லை. நானே நேரில்அந் தக் கொலையை முடிக்கிறேன். அதற்கு வழி செய்து கொடு அந்தவெற்றிக்குப்பின் காதலை அனுபவிப்போம்'' என உறுதி யாகச்சொல்லிவிட்டாள். மன் னனுக்கு இன்னது செய்வ தென்றே புரியவில்லை. அவ ளிடம் ஏமாந்துவிட்டதாக எண்ணினன். ஆயினும் அவ ளுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றி வைக்கவேண்டு மென்ற பெருமிதமும், காதல் வெறியும் ஏற்படுசெய்வதாக உறுதி கொடுக்க வைத்தது.

பின்னர் சில நாளைக்கெல் லாம் சோழ வங்கத்திற்கிடை யில் அமைக்கப் பட்டிருந்த தீவு மாளிகையில் ராஜேந் திரன் தனித்திருக்கும் சமயத் தில் நடனப்பெண்ணைக் சென் று, ஆட்டத்திற்கிடையில் அவ ளுடைய பழி வாங்கும் திட் டத்தை நிறைவேற்றுவதென மன்னனே அவளுக்கு ஆவன செய்து கொடுத்தான்.

அதுவரையில் அவளுடை காதற் கள்ளன்தான் மன்னன் என்பது அவளுக்குத் தெரி யவே தெரியாது. அவளும் தீவு மாளிகைக்குச் சென்ருள்! அவளுடைய காதற்கள்ளனக நடித்தவன், மன்னன் வரும் போது அங்கு உடன் இருப்ப தற்கில்லையென தலைமறைவா கிறுன்.

மன்னனும்வந்தான். திரைக் குப் பின்னிருந்தே பேசினன் வேற்றுக் குரலில்! அவளும் அவன் முன்னிலையில்ஆடினுள் கத்திவைத்து சுழன்ருடும் கட் டம் வந்தது. அந்த சந்தர்ப் பத்தைத்தான் அவள்உபயோ கித்துக் கொள்ள இருந்தாள் ஆடுகின்ற போக்கில் வெறி கொண்டு வேந்தன் மார்பில் குத்தப் போனுள். அந்த சந் தர்ப்பத்தில் திரை அகன்றது. அங்கே மன்னனுக மார்பைத் திறந்து காட்டியபடி இருந் தான். அவளுடைய 'காதற் கள்ளன்!

இந்துமதிக்குத் தலைசுழன் றது. கத்தி தானே கைநழுவி கிழே வீழுந்தது. உணர்வற்று அப்படியே தரையில் சாய்ந்து விட்டாள். மன்னன் அவளை வாரியெடுத்து மடிமீதுகிடத்தி அவள் மயக்கத்தை தெளிவித் தான்.

அவள் விழிகள் மலர்ந்தன. அவை இரண்டும் கங்கையும், காவிரியுமாகப் பெருகின. அவ ளுடையநெஞ்சுஅணை உடைத் துக் கொண்டது. மன்னனைக் கொல்லவந்தஅவளுடையவஞ் சத்தை மன்னன் தன்னுடைய எல்லையற்ற அன்பினல் கொன் றுவிட்டான்!யாரை,யார்வென் றது என்ற கேள்வியையும் விடையையும் அவர்கள்காதற் கடலிலே தேடித்தான் கண்டி ருப்பார்கள்.

ஆனல் ஒன்று; வங்கத்தின் மானத்தை மீட்பதாகச் சொல்லி வந்த அவள் வார்த் தையைநிறைவேற்றியேவைத் தான் ராஜேந்திரன்.

இன்றைய வங்கம் அன்று லாடம் என்று வழங்கியது. அதனை கிழக்கு—மேற்கென இரண்டாகப் பகுத்து தனது பிரதிநிதியை மேற்குப் பகு திக்கு சுயேட்சை மன்னனுக வும், கிழக்குலாடத்தை அனங் கபாலன் தலைமையில்மீண்டும் சுதந்திரம் பெற்ற நாடாகவும் பிரகடனப் படுத்திவிட்டான்!

ஆகா! இந்துமதியின் காத லால் வங்கம் அன்றுசுதந்திரம் பெற்றது.

முற்றும்.

# பாரதியை ஏன் பாராட்டுகிறோம்?

ஒரு குறிப்பிட்ட இனத்தில் பிறந்தவன் என்பதற்காக நாம் யாரையும் பழிக்கமாட்டோம். ஒரு குறிப்பிட்ட மொழி பேசு பவன் என்பதற்காக நாம் யாரையும் வெறுக்க மாட் டோம். ஒரு குறிப்பிட்ட நாட் டினன் என்பதற்காக நாம் யாரையும் பகைக்க மாட் டோம். ஆம், நாம் இன வெறி யர்கள் அல்ல; மொழி வெறி யர்களுமல்ல.

நாம் இனப்பற்று மிகுந்தவர் கள்; நமது இனத்தை இழிவு படுத்துவோர் எவராயினும் அவர்களை எதிர்த்தும் போராடுவோம்.

நாம் தாய்மொழிப் பற்று டையர்கள்; நமது மொழி யை இழிவு படுத்துவோர் எவ ராயினும், நமது மொழியை அழித்தொழிக்க முனைவோர் எவராயினும் அவர்களை நமது பகைவர்களாகக் கொள்வோம்; எதிர்த்துப் போராடுவோம்.

நமக்கு ஒரு இலட்சியமுண்டு அந்த இலட்சியத்தை நிறை வேற்ற நமக்குச் சில கொள் கைகளுண்டு. அந்த கொள்கை களின் அடிப்படையில்தான் நாம் நமதுஎல்லைகளைநிர்ணயிக் கின்றோம்.

ஒருவனது தோற்றத்தைக் கண்டு துள்ளிக் குதித்திட மாட்டோம். அவன் தூவிடும் கருத்துக்களை வைத்தே, நண் பனு? பகைவனு? என்பதை முடிவு கட்டுவோம். ரத்தப் பரீட்சை நடத்தி நாம் யாரை யும் ஆரியன்—திராவிடன் என்று கூறவிட்டோம். நம் மிடம் உள்ள உரைகல் கொள்கைப் பூர்வமானவை.

இந்த முறையில் பாரதி யாரைப் பற்றி நமக்கு நல்ல அபிப்பிராயமுண்டு. அவரது கருத்துக்கள் நாட்டு மக்களது நலிவை போக்குபவை; நலம் பல விளைவிப்பவை.

பாரதி சகல பிரசனைகளைப் பற்றியும் தனது கருத்தை தெளிவாகக் கூறியிருக்கிறுர். தனது இனத்தில் ஜாதியில் பிறந்தோர் என்பதற்காக அவர் எதையும் மறைக்க வில்லை. உள்ளதை உள்ள படியே மனம்விட்டு கூறு கிறுர்.

பேராசைக்காரனடா
பார்ப்பான்—ஆனல்
பெரிய துரை என்னில்
உடல் வேர்ப்பான்
யாரானும் கொடுமை
செய்வான்—பணம்
அள்ளி இடவில்லை
யெனில் வைவான்''

பார்ப்பனர் களானுலும் அவர்களைக் காப்பாற்ற தங் களுக்கு பெரும் பொறுப்பு ஏற்பட்டு விட்டதாக கருதிக் கொண்டு "திராவிட முன் னேற்றக் கழகம் ஒரு வகுப்பு வாத ஸ்தாபனம்'' என்று தூற்றுவோர்களானு லும் இக் கவிதையை ஊன் றிப் படிக்கவேண்டும். பாரதி கூறிய கருத்துக்களுக்கும் நாம் கூறிவரும் கருத்துக்களுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது. என்பதை கவனிக்கவேண்டும். பாரதி கூறிய கருத்துக்கள் வகுப்புவாத கருத்துக்கள்தான் என்று வாதாடப்படுமானுல் நாமும் வகுப்புவாதிகள்தான் என்பதை ஒப்புக்கொள்ளு கின்றேம். பாரதி மேலும் கூறுவதைக் கேளுங்கள்.

"பிள்ளைக்குப் பூணூலா
மென்பான்—நம்மை
பிச்சுப் பணம்
கொடெனத் தின்பான்
கொள்ளைக்கே சென்ருலும்
வஞ்சம்— செய்து
கூசாமல் வாங்கிடுவான்
லஞ்சம்''

இப்படிப் பல விஷயங்களை தயங்காமல் கூறியிருக்கிறுர் பாரதி. 'பார்ப்பானை ஐய ரென்ற காலமும் போச்சே'' என்று கூறியவர் பாரதிதான். "இந்நாளிலே பொய்மைப் பார்ப்பார்—அவர் ஏது செய் தும் காசுபெறப் பார்ப்பார்'' என்று கூறியவரும் பாரதியே தான். 'தமிழன்'

பாரதியார் சுந்தரரூபன். மாநிறம், ஐந்தரை அடிக்குக் கொஞ்சம் அதிகமான உயரம். அவருடைய மூக்கு மிகவும் அழகான மூக்கு. அவருடைய கம்பீரமான முகத்துக்கு அளந்து அமைக்கப்பட்டதைப் போலிருக்கும் அந்த அழகிய நாசி. ஸீஸர், ராஜ்கோபாலாச்சாரியருடையவை போல கருட மூக்கல்ல. ஸீஸர் மூக்கு நடுவில் உயர்ந்து, நுனியில் கூர்மையாகி, கண்டவர்களைக் கொத்துவதுபோலத் தோன் றும். பாரதியாரின் மூக்கு கடைச்ல் பிடித்தது போலிருக்கும் நீண்ட நாசி. அந்த நீளத்தில் அவலட்சணம் துளிகூட இருக்காது.

பாரதியாரின் கண்கள் செவ்வரிபடர்ந்த செந்தாமரைக் கண்கள். இமைகளின் நடுவே, அக்கினிப்பந்துகள்ஜ்வலிப்பது போலப் பிரகாசத்துடன் விளங்கும். அந்தக் கண்களை எவ் வளவு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலும் தெவிட்டாது.

அவருடைய நெற்றி படர்ந்த நெற்றி. நெற்றியின் இரண்டு கங்குகளிலும், நிலத்தைக் குடைந்துகொண்டு போயிருக்கும் கடலைப் போல முகம் தலைமயிரைத் தள்ளிக் குடைந்து கொண்டு போயிருக்கும். கங்குகளின் மத்தியில் முகத்தின் நடு உச்சியில், மயிர் கொஞ்சம் நிமிர்ந்து நிற்கும். நெற்றியிலே இந்தச் சேர்மானம், அவருக்கு வர்ணிக்க முடி யாத அழகைக் கொடுத்தது. பேர்பாதிக்கு அதிகமாக அவர் தலை வழுக்கை.

—வ. ரா.

செப்டம்பர் முதல் வெளி வருகிறது!
கலைக்கூடம்
ஆசிரியர் ஆராய்ச்சிமணி
உயரிய சினிமா இதழ்
எங்கும் ஏஜண்டுகள் தேவை
விவரங்களுக்கு, நிர்வாகி
கலைக்கூடம்
5, பிளாக்கர்ஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை.2.

# சிறையிருக்கும் காதலர்க்கு!

**கண்ணதாசன்**

**சிறையிருக்கும் காதலர்க்கு,**

இருட்குகையில் விளையாடும் ஏந்தலே! வாழிய நீர்! பொருட்குவியல் என்றும், புத்தமிழ்தம் என்றும் உங்கள் திருவாயால் மொழிந்த தெல்லாம் சிந்தைவிட்டு நீங்காமல் அவதியுறும் உங்கள் அழகுமயில் எழுதுகிறுள்: ஞாலங்கடந்து காலம் போக, இரவும் பகலும் சுழன்று ஓட, விழித்த விழியை இமைத்தலும் இன்றி "வேளை வருமா? அது நாளையாயிருக்குமா? விடுதலை பெற்று நீர் வெளிவருவீரா?" என்றெல்லாம் எண்ணி எண்ணி அயிர்த்துக் கிடந்த ஏந்திழை எழுதுகிறுள்—

ஓ! என் உயிரே! என்னை மறந்துவிடுக!

ஓ! என் இதய சக்கரவர்த்தி! என்னை மறந்துவிடுக!

—என்ன இது! திடுக்கிடுகிறீர்களா? திகைக்கிறீர்களா? ஆம்! என் கண்ணு! என்னை மறந்துவிடுக! "அத்தான் அத்தான்" என்று ஆடிவரும் ஆரணங்கு "மறந்துவிடு" என்கிறுளே என்று கலங்குகிறீர்களா? இல்லை! நீங்கள் என்னை மறந்துவிடத்தான் வேண்டும்! அன்றொரு நாள் மாலை, தென்றல் தவழ் சோலை, தேன் மணக்கும் வேளை, காத்து நீர் நின்றதுவும், கடைவிழியால் பார்த்ததுவும், ஊறிவரும் உணர்வோடு ஓடி நான் வந்ததுவும், வலக்கரத்தால் கரம் பற்றி, இடக் கரத்தால் தலைகோதி, "மாங்கனி" என்றென்னை வாயார அழைத்ததுவும், அனுமதிபெருமலே அச்சாரம் கொடுத்ததுவும், ஓ! என் கூட்டுப்புறுவே! மறந்துவிடுக!

இதுவென்றும் பாராமல், அதன் மென்மையையும் உணராமல், சித்திரக்காரன் என்ற நினைப்பில், இதழில் சித்திரம் வரைந்தீரே! அந்தக் கதையையும் மறந்துவிடுக!

மீண்டும் கண்களிலே மானேடைக் கண்டு, விழிவேலால் அதைத்தாக்கி விஞடியிலே கொன்று, தேனூறும் இதழ் தொட்டு பல காதை பயின்று, திருமணங்கொள் நாதன்போல் அருகினிலே நின்று, "தென்பாங்கே! தேன்மொழியே! சிலையுருவே" என்று, திருப்பாண்டிக் கவிஞனைப்போல் கவிதை மழை பெய்து, அனுவோடு அனுவாக அரவணைத்துக் கொண்டு, அங்கமெலாம் புளகிக்கத் தந்த சுகம் கோடி! ஆனுலும் அன்புருவே! அதை நீர் மறந்து விடுக!



"மனமாற்றம்" அல்ல இது!

"இடமாற்றம்" அல்ல இது!

"புதுவெள்ளம்" வரவில்லை!

"புலன் மாற்றிப்" போடவில்லை!

உங்கள் காதலிதான்!

அதே உள்ளம்தான்!

பத்தரை மாற்றுத் தங்கம் தான்.

ஆனுலும் அதனை நீர் நினைக்க வேண்டா!

சிறை உம்மைச் சிதைக்கிறது; தெரியும் எனக்கு. சிந்தையிலே தளர்வில்லை; அறிவேன் நான்! வதையெல்லாம் தாங்குகிறீர்! புரிகிறது! மங்கையென்னை நினைக்கின்றீர்! வேண்டாம்! வேண்டாம்!

எனக்கில்லையா ஆசை? எனக்கில்லையா காதல்? காய்ச்சல் இல்லாமலே உடம்பு கொதிக்கிறதே எனக்கு, உங்கள் உருவை நினைக்கும்போது! வற்றுத காதலிலே வதைகின்றேனே கன்னி நான்! ஆனுலும் என் அழகு மாணிக்கமே! என்னை நீர் மறந்து விடுக!

"காதலிக்கிறேன், கொள்ளை கொள்ளையாய்" என்கிருள். ஆனுலும் "மறந்துவிடுக" என்றுஉபதேசிக்கிருள் என்ன இது! பித்தமா! என்கிறீர்களா? பிழைபாடு நேர்ந்ததென்ன என்கிறீர்களா? புரியாமல் தவிக்கிறீர்களா? உங்களுக்குப் புரியாது!

உள்ளம் உருக ஊனெல்லாம் நெக்குருக—கள்ளம் கருகிக் கலைமணக்கும் நெஞ்சோடு தெள்ளுதமிழ்ச் செல்வி செப்புகிருள்; என் செல்வ! உள்ளத்திருந்து என்னை ஒதுக்கிவிட்டு வாழ்ந்திடுக! ஒருதுளியும் சபலமின்றி என்னை மறந்து விடுக!

சதிகாரர் சதிச் செயலால் சிதைவுற்ற தாயகத்தை மீட்டுக்கொடுக்கும் வீரராய், தியாக சிந்தைத் தீரராய்ச் சென்று சிறையிருக்கும் என் செல்வமே! என்னை மறந்து விடுக!

ஏன் என்று இப்போது சொல்கிறேன்:

என் நினைவு உங்களைக் கலக்கி, மனத்தை பலவீனப்படுத்தி விட்டால், சபலப்படுத்திவிட்டால், என் வீரர் எங்கே கோழையாகிவிடுவாரோ என்ற அச்சத்தாலேயே கூறுகிறேன்: என் செல்வமே! என்னை மறந்து விடுக!

—காதலி

"சிரிப்புத்தான் வருகுதையா" எழுதிய தோழர் வணங்காமுடி, தென்றலிலிருந்து விலகிக்கொண்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்!

—ஆசிரியர்

## தவறு! தவறு! தவறு!

சென்ற 28–8–54உ இதழில், கேள்வி பதில் பகுதியில் ஒரு தவறு நிகழ்ந்துள்ளது. அச்சுப் பிழையின் எல்லையில் அதுபோய் நின்றது. அதாவது: ஒரு நண்பர், "முளரி என்றுல் என்ன பொருள்" என்று கேட்டார். நான "தாமரை" என்று பதில் கொடுத்திருந்தேன். அது கேள்வி—அச்சுப் பிழையாக "முரளி என்றுல் என்ன பொருள்?" என்று ஆகிவிட்டது! அதாவது: கோபாலகிருஷ்ணனின் புல்லாங்குழல் வந்து புகுந்துவிட்டது. தவறை நண்பர்கள் மன்னிக்க. முளரி என்றுல்தான் தாமரை என்று பொருள்.

வருகிறது!

# வணங்காமுடி

வாரப் பத்திரிகை

தனி இதழ் அணு ஒன்று!

- சவுண்டிகளுக்குச் சவுக்கடி!
- சிவஞான ரகசியம்!
- அந்தரங்க ஊழல்கள்!
- கண்ணகி அச்சகம் வந்த கதை!
- காலிகளின் கூடாரம்!

ஆசிரியர்; வணங்காமுடி

எழுதுக:— வணங்காமுடி

சென்னை-14.

# காணி நிலம் வேண்டும்

கண்ணதாசன்

''ஐயா! உமக்கு என்ன வேண்டும்?''

''ஆறு லட்ச ரூபாய் வேண்டும்; அழகான பங்களா வேண்டும்''

''உமக்கென்ன வேண்டும், நண்பரே!''

''நாற்பது வேலி நிலம் வேண்டும்; நகைநட்டுகள் ஏராளமாக வேண்டும்.''

''உமக்கு?''

''எல்லாம் எனக்கே வேண்டும். இன்னொருவன் அந்த ஸ்தானத்துக்கு வரக் கூடாது!''

* * *

''ஆசைக்கோர் அளவுண்டோ!'' என்பர் வேதாந்திகள்.

''ஆசையை விட்டுவிடு'' என்னும் உபதேசிப்பர்.

இரண்டும் மடமை. ஆசைக்கு எல்லை வகுக்கிறன் பாரதி. அது பொதுவுடைமை. எல்லோர்க்கும் கிடைக்கக் கூடியது; கிடைக்க வேண்டியது.

மிகச் சுருக்கம். காணி நிலம் வேண்டும்! அங்கே தூணில் அழகியதாய் நன்மாடங்கள் துய்ய நிறத்தினதாய், அந்தக் காணி நிலத்திடையே ஒரு மாளிகை கட்டித்தர வேண்டும். இல்லாமல் முடியாது. ஒரு மாளிகை! ராஜாசர் மாளிகைபோல அல்ல; சிறியதாயினும் போதும்; ஆனல் அழகாக, சுத்தமாக இருக்கவேண்டும். ஒரு கேணி—அதன் அருகில் தென்னை மரம் இருக்க வேண்டும். பாட்டுக் களித்திட அங்கே ஒரு பத்தினிப்பெண் வேண்டும். இப்படி ஒரு சிறு அமைப்பு! ஒழுங்கான ஆட்சியிலே எல்லோர்க்கும் கிடைக்கக்கூடியது. அடுத்தவன் வயிற்றெரிச்சலைத் தூண்டாத அமைப்பு. எல்லோர்க்கும் சுகம் கிடைக்கும் வழியான அமைப்பு. இது கவிஞனின் கோரிக்கை—ஆயினும் மனித மனத்தின் கோரிக்கை. தனி உடைமைப் பெருக்கத்தை இது தடுக்கும்; எல்லோர்க்கும் இந்த எண்ணம் வந்தால்!

* * *

தென்றல் வீச, தென்னை சலசலக்க, மாளிகைக்குள் மஞ்சத்தில் பாட்டுக் களியச் செய்யும் பத்தினிப் பெண்ணின் பக்கத்தில் ஒரு மனிதன். அவன் கவிஞன்—அவனது தேவை பூர்த்தியாகிவிட்டது. எங்கும் இப்படியே . . . ஒருவரிடம் ஒருவர்க்குக் கோபம் இல்லை. ஒருவனை ஒருவன் சுரண்டவில்லை. தேவையானது கிடைத்துவிட்டது. இப்படி ஒரு எண்ணத்தை பாரதி சுருக்கமாக வெளியிடுகிறன்.

வரி என்ற பெயரிலே சுரண்டல், அது வடநாட்டுக்குப் போகிறது, அங்கே தொந்திகள் பருக்கின்றன. உத்தியோகம் முழுமையும் பார்ப்பனர் வசம். ஒவ்வொரு பார்ப்பனருக்கும் ஏராளமான நிலங்கள்-பல காணிகள்! பல மாளிகைகள! இன்னும் சில முதலாளிகள்; பல கிராமங்கள் இவர்களுக்குச் சொந்தம்—இந்தக் கூட்டத்தின் கையிருப்பைக் குறைக்கவேண்டும். அவர்களுக்கும் காணி நிலம்தான் வேண்டும்!

ஏழை, பராரி, பிச்சைக்காரன், தரித்திரன்—வீதியிலே! இவனிடம் ஒன்றும் இல்லை—இவனுக்கும் காணி நிலம்தான வேண்டும்!

Leveling Down-முதலாளித்துவத்தை!

Leveling up-பிச்சைத்துவத்தை!

இரண்டும் சந்திக்கும் இடத்தில் காணி நிலம் இருக்கிறது! அது எல்லோர்க்கும் கிடைக்கிறது. மேடு பள்ளம் இல்லை, சம நிலம்.

அண்ணு சொன்ன பொதுவுடைமை இதுதான்: ''மூன்று வர்க்கம்; ஏழை—பணக்காரன்—நடுத்தரம். மூன்றையும் சந்திக்கவைத்து ஒரு நிலைப்படுத்தும் முயற்சிதான், Leveling Down&Leveling up.''

ஒன்று பாருங்கள்—எல்லோர்க்கும் காணி நிலம். தூணில் அழகிய மாளிகை. பத்தினிப் பெண்—கிடைக்குமா, கிடைக்காதா? ஆட்சி யோக்கியமாக இல்லை. அயோக்கியர்கள் மயம்! அதனுல்தான் ஏற்றத்தாழ்வு, நாட்டு சனத்தொகை எல்லாவற்றிற்கும் காணி நிலம் கிடைக்கும்—வழி செய்தால்!

* * *

இங்கே பாட்டுக் களித்திடும் பெண்கள், பத்தினிப் பெண்களாக வாழ முடியவில்லை. பத்தினிப் பெண்களிடத்தில் பாட்டுக் களியவில்லை—பெரும் பாலும்! கலை என்றுலே களங்கம் என்கிறுர்கள், பத்தாம் பசலிகள்! பாடுபவன் தனிச் சாதி ஆகிவிடுகிறன். பத்தினிப் பெண் பாடினுல் அந்தச் சாதியில் சேர்ந்துவிடுகிறுள்—எல்லாம் குறுகிய புத்தி. ''குடும்பப் பெண்ணுக்கு பாட்டு ஏண்டி!'' குமுறல்! ''பாடவந்தப்புறம் குடும்பம் என்னடி! அப்படி அப்படிப் போக வேண்டியதுதான்!'' இது அங்கே! இரண்டும் சேர வழி வகுக்கிறன் பாரதி. பாடுகிறுள்—அவள் பத்தினியாகவும் இருக்கிறுள்! சுகமான சேர்க்கை!

* * *

இன்னும்... முத்துச் சுடர் போல நிலாஒளி முன்பு வரவேணும்! அங்கு கத்தும் குயிலோசை சற்றேவந்து காதில் படவேணும்! சித்தம் மகிழ்ந்திடவே, நன்ருய் இளந் தென்றல் வரவேண்டும்! வேறென்ன வேண்டும். இந்த சுகமான கற்பனையைக் கேட்கும்போதே தூக்கம் வருகிறது! ஆம் அது வரவேண்டும். வந்தால்தான் கவிதை! இல்லையேல் வரட்டு அளப்பு!

''குடிக்கவேண்டும்; மதுக் குடிக்கவேண்டும்!'' என்றுன் உமர்கயாம்!

பாரதியும் குடிக்கச் சொல்கிறுன்—இளநீர்!

''அனுபவிக்க வேண்டும்! பெண்களை அனுபவிக்கவேண்டும்!'' என்றுன் பைரன்.

பாரதியும் அனுபவிக்கச் சொல்கிறுன்—பத்தினிப்பெண் ஒருத்தியை!

பாரதியின் பண்பாடு திராவிடப் பண்பாடு.

பிறப்பில் மட்டும் அவன் வேறு; ஆனல் என்ன? அதில் நமக்கு விரோதம் இல்லை!


இதோ! தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிறேம்!

நேஷனல் புரோடக்ஷன்ஸ்:

**அம்மையப்பன்**

மதராஸ் பிக்சர்ஸ்:

**செந்தாமரை**

கஸ்தூரி பிலிம்ஸ் — **மேனகா**

பத்மினி பிக்சர்சஸ்: — **முதல் தேதி**

மற்றும்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல் நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம் மற்றும் பல படங்கள்!

**ராணி பிக்சர்ஸ்**

திருச்சி.



**தென்றல்**

வார ஏடு

✦

ஆண்டு சந்தா ரூ. 6

6 மாத சந்தா ரூ. 3

★

இன்றே சந்தாதாரராகுங்கள்

✦

தென்றல்

சென்னை - 14.

# காமராசரே!

## நீருமா, இப்படி?

திருப்பாபுலியூர் வரதராஜ பெருமாள்கோவிலில் சென்றசில மாதங்களாக ஆஞ்சநேய உபாசகர் ஒருவர் ஜோஸ்யம் சொல்லிக்கொண்டுவருகிறார்.

நேற்று அவர் தன் பக்தர்களிடம் பேசிக் கொண்டிருக்கும் போது திடீரென ஆவேசம் வந்தவர்போல் எழுந்து 'தெற்கேயிருந்து பெண் விஷயமாக ஒரு பக்தர் வந்திருக்கிறார் 'அவர் என் முன்னே வரட்டும்' என்று கூறினார்.

உடனே பக்தர் ஒருவர் உபாசகரின் முன் வந்துதான் தஞ்சாவூரில் இருந்து வந்திருப்பதாக கூறினார்.

''உன் பையில் ரூ 40-7-3 இருக்கிறது சரிதானா?'' இது ஆஞ்சனேய உபாசகரின் கேள்வி

பக்தர்: (எண்ணிப் பார்த்து விட்டு) ஆம் ஐயனே !! சரியாக 40-7-3 தான் இருக்கிறது.

உபாசகர்: உன் பையில் ஒரு பெண்ணின் படம் இருக்கிறது உண்மையா?

தஞ்சாவூர் பக்தர்: (ஆச்சர்யத்துடன்) ஆம் சுவாமி.

உபாசகர்: அந்தப் பெண்ணை நீ கலியாணம் செய்து கொள்ள விரும்புகிறாயா?

பக்தர்: (அசடு வழிய பார்த்து) ஆம் சுவாமி அருள் பாலிக்கவேண்டும்-!

உபாசகர்: பெண்ணின் பெற்றோரும், உன் குடும்பத்தாரும் இதை எதிர்க்கிறார்கள். பக்தா! பயப்படாதே! நான் இருக்க பயமேன்! அனுமாரை பிரார்த்தனை செய். கலியாணம் நடக்கும் போ! வெற்றி உனதே. காரிகையைக் கைப்பிடிக்க முடியுமா என்று ஆஞ்சநேய உபாசகரிடம் 'அருள் பெற தஞ்சாவூரிலிருந்து, திருப்பாபுலியூர் வந்த அந்த காதலர் களிப்புடன் ஊர் சென்றாராம்; ஆஞ்சனேயரை மனதில் தியானித்துக்கொண்டு — மேற்கொண்டு திருமணம நடந்ததா பக்தனின் பையிலேயிருந்த படம் என்னவாயிற்று என்பது நமக்குத் தெரியவில்லை. பக்தர் உபாசகரின் காலில் விழுந்து பின்னர் வீரனைப்போல் வெளியேறினர் என்று ஒரு இதழ் இச்செய்தியை அத்துடன் முடித்திருக்கிறது.

வெறும் தண்ணீரை சர்வரோக நிவாரணியாக மாற்றித் தருகிறேன் என்று சொல்லி கும்பகோணம் கோவிலில். வீரஜோதி ராமலிங்கம் என்ற முகமூடிச் சாமியார் என்னும் பெயருடைய ஒருவர் முகாம்போட்டிருக்கிறார்.

வருகிறவர்கள் காவேரியில் ஸ்நானம்செய்துஒருபாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருகிறார்கள். வீரஜோதி ராமலிங்கம் மவுனமாகத் தியானம் செய்து தனது அற்புத சக்தியால் அந்தக் காவேரி ஜலத்தை மந்திரித்துக் கொடுப்பார். அதை உபயோகிப்பவர்களுக்கு எவ்வித மான வியாதி இருந்தாலும், தீராத வியாதிகள் பில்லிசூன்யம், நீண்டகால குஷ்டம், முதலிய சகல வியாதிகளும் தீர்ந்து சுகமடைவார்கள் என்று அந்த சாமியார் வெளியிட்டுள்ள நோட்டீசில் காணப்படுகிறது.

ஒருபெரிய திரைக்குப்பின்னே முகமெல்லாம் மூடிக்கொண்டு வீரஜோதிலிங்கம் இருக்கிறார். அவரது இரண்டு கண்கள் மட்டுமே வெளியே தெரிகின்றன! அவருக்கு எதிரே குடம் குடமாகவும், பாத்திரங்களிலும், காவேரித் தண்ணீர் நிரப்பப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

வீரஜோதி லிங்கம் அடிக்கடி 'பரமாத்மா' என்று கோஷமிடுகின்றார். வீரஜோதிலிங்கம் மைசூர் வாசி, ஒரு காலத்தில் தீராத நோய் ஒன்றினால் கஷ்டப்பட்ட இவர் கடலில் விழுந்து தற்கொலை செய்துகொண்டாராம். அப்போது ஒரு சாமியார் இவரைக் காப்பாற்றி தனது மந்திர சக்தியால் வீரஜோதிலிங்கத்தின் நோயைப் போக்கி, அந்த மந்திரத்தையும் ஜோதிலிங்கத்திற்கு கற்றுக்கொடுத்தாராம். பின்னர் அந்தப் பெரியவர் மாயமாய் மறைந்துவிட்டார். இப்போது ஜோதிலிங்கம் தனக்கு கிடைத்த அபூர்வ மந்திர சக்தியினால், பல நாடுகள் சுற்றி தீர்த்தத்தை மந்திரித்துக் கொடுத்து பின்னர் இப்போது கும்பகோணம் வந்து ஜனங்களின் வியாதிகளைக் குணப்படுத்துகிறார், என்று சிஷ்யர் கந்தங்கள் குருவின் வரலாற்றைக் கூறுகின்றனர். வீரஜோதியிங்கம் 'பரமாத்மா' என்று கூறும்போது அவர் சிஷ்யர்களும் பரமாத்மா என்பார்கள். உடனே கூடியிருக்கும் மக்களும் 'பரமாத்மா' என்று கோஷமிட்டுப் பின்னர் மந்திரிக்கப்பட்ட ஜலத்தை குடம் குடமாக எடுத்துச் செல்கின்றனர்.

இந்தச் செய்தியை ஒரு பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. வீரஜோதிலிங்கம் இப்போது எங்கேயிருக்கிறார் என்று தகவல் நமக்குத் தெரியவில்லை. எங்கே போனாரோ, என்ன வாயிற்றோ, என்று பக்தர்கள் பலர் அவரைத் தேடினாலும் தேடுவார்கள்.

சென்னை சர்க்கார் ஒற்றைவாடைத்தியேட்டரில் நடைபெற இருந்த ராமாயணம் என்னும் நாடகத்தை தடை செய்துவிட்டனர்.

ஒற்றைவாடைத் தியேட்டரில் நடைபெற இருந்த ராமாயணம் என்ற நாடகம் ஆபாசமாகவும், அவதூறாகவும் இருப்பதால், மேற்படி நாடகத்தை சர்க்கார் தடை செய்வதாக அரசாங்க உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

"அன்பின் வெற்றி அல்லது ஆரியர் சூழ்ச்சி", "கிருஸ்து எதிர்ப்பு" என்ற இரு நாடகங்களையும் நாடக சட்டத்தின் கீழ் அரசாங்கம் சென்னை மாநிலத்தில் எங்கும் நடிக்கக்கூடாது என்று தடை விதித்துள்ளனர் என்று தெரிகிறது.

மேலே கொடுக்கப்பட்ட நான்கு செய்திகளும் உண்மையானவை. பத்திரிகைகளில் வெளிவந்தவை. ஆஞ்சனேய உபாசகர். தஞ்சாவூர் பக்தருக்கு காதல் அபயம் அளித்ததும், வீரஜோதிலிங்கம் காவேரித் தண்ணீரை சர்வரோக நிவாரணியாக மாற்றுவதும், சென்னை சர்க்கார் நாடகங்களைத் தடை செய்ததும் ஆகஸ்டு மாதத்தில் நடைபெற்ற சம்பவங்கள், ஒரே மாதத்தில் நடைபெற்ற நான்கு சம்பவங்கள், எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. என்று கருதுகிறோம். இந்த சம்பவங்கள் எல்லாம் கனம் காமராசர் ஆட்சியிலே நடைபெற்றிருக்கிறது.

இந்த மாதத்திலேதான் கனம் கமராஜர் ஒற்றுமை கீதம் பாடுகிறார். கொள்கையேதும் இல்லாத பதவி வெறி பிடித்த தமிழரசுக்கழகமும், பிளாட்டிங்பேப்பர் கட்சியான பி. சோஷலிஸ்ட் கட்சியும், காணமற்போயிருக்கும் கோழியும், கொள்கை, நாட்டு மக்கள் முன்னேற்றம் இவைகளையே கருத்தில் கொண்டு பணியாற்றும் திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து பணியாற்றலாம், கூடிக் குலாவலாம்; ஆடிப் பாடலாம் என்று கனம் காமராசர் அழைக்கிறார்.

ஆனால் காமராசர் செய்யும் காரியங்களோ, நல்லோர் மனதைக் கவர்வதாகக் காணோம். வீரஜோதிலிங்கம் செய்யும் மாந்திரீக வேலைகளை அனுமதிக்கிறார். நாடகம் நடத்தினால் மக்கள் கெட்டுப்போவார்கள் என்று கூறி தடைசெய்கிறார்.

காவேரித் தண்ணீர், திடீரென சர்வரோக நிவாரணியாக மாறுகிறது, கும்பகோணத்தில் ஆஸ்பத்திரிகளே தேவையில்லை என்று தோன்றுமளவுக்கு வீரஜோதிலிங்கம் 'பரமாத்மா' என்று கோஷிக்கிறாராம்.

காமராசரோ மதுரையில் பேசுகிறார் 'தமிழர்களின் பண்பாட்டைக் காப்பாற்றுவேன், தமிழ் நாட்டின் பெருமைக்கு ஒப்ப ஆட்சி நடத்துவேன்! என்று. ஆஞ்சனேய உபாசகர் காதல் அபயம் அளிப்பது, தற்கொலை செய்துகொள்ள முயன்ற வீரஜோதிலிங்கத்திற்கு பெரியவர் ஒருவர் ஞானோதயம தந்து விட்டுமறைந்ததும் காமராசர் கண்களுக்கு தமிழ் பண்பாடாகப்படுகிறதோ என்னமோ! நன்றாக இருக்கிறது.

காமராசர் ஆட்சிக்கு வருகிறார் இனிமேல் இந்த நாட்டு ஆட்சியிலே கண்யம் அதிகமாக இருக்குமென்று நம்பினோர் பலர்.

அவரே தானும் அவர்களைச் சேர்ந்தவர்தான் என்பதைத் தன் செயலால் காட்டுகிறார். இதுவரை ஆட்சி புரிந்த காங்கிரசாரில் சிலர் நாடகங்களை, குறிப்பாக பகுத்தறிவுக் கருத்துள்ள நாடகங்களைத் தடை செய்தனர்; உடனே அல்ல சில நாட்கள் அந்த நாடகங்கள் நடைபெறும். அதன் பின்னர், 'வகுப்புத்துவேஷம்' என்று கூறி தடை செய்வார்கள்.

அன்பர் காமராசர் ஆட்சியிலே இந்த வகையில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. நாடகங்கள் நடைபெறு முன்னேயே தடைசெய்யப்படுகின்றன. மக்கள் பார்த்து விட்டால் என்ன நேருமோ என்று, நாடகம் அவதூறாக இருக்கிறது என்று ஆட்சியில் இருப்பவர்களே தீர்மானித்து தடை செய்கிறார்கள். பாராட்டவேண்டிய செய்தியில்லையா? மக்கள் மீது காமராசர் எவ்வளவுதூரம் கவலைப்படுகிறார் என்பதற்கு இதைவிட அத்தாட்சி எதற்கு.

நல்ல ஆரம்பம் — பண்பை வளர்க்கின்றன் - என்று பறை சாற்றும் திராவிட அமைச்சரின் ஆட்சி. வீரஜோதிலிங்கங்களை வளர்க்கிறது, காவேரித் தண்ணீர் சர்வரோக நிவாரணியாக மாறினால், சுகாதார இலாகாவில் செலவு குறையுமென்று காமராசர் கருதுகிறாரோ என்னமோ?

சிலர் பார்த்தால் பசுப்போல் இருப்பார்கள் - அதிகம் பேச மாட்டார்கள் - தன்னைச் சூழ்ந்திருப்பவர்களையும் அதிகம் பேச விடமாட்டார்கள். புன்னகை முகம் காட்டி பொல்லாங்கை விதைப்பவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

ஒற்றுமையாக இருக்கலாம். கம்யூனிஸ்டுகளின் எதேச்சாதிகாரத்தை ஒழிப்போம் 'என்று காமராசர் அழைப்பு விடுகிறார். கம்யூனிஸ்டுகளை ஒழிப்பதில் மெகார்தி போன்று ஆவேச உணர்ச்சி கொண்டவராகக் காணப்படுகிறார். இது ஒன்றும் புதிய போக்கு அல்ல. காமராசருக்கு முன்பதவியில் இருந்த ஆச்சாரியார் ஆரம்பத்திலே இப்படித்தான் கூறினார். கம்யூனிஸ்டுகள் என்முதல் நம்பர் எதிரி என்றார்.

காமராசரும் — ஆச்சாரியாரும் வேறு என்றாலும் இருவரும் பாசீச வெறிபிடித்த காங்கிரசைக் கட்டிக்காக்க முனைபவர்கள் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

கனம் காமராசரின் பேச்சுக்கும் செயலுக்கும் பொருத்தம் இருப்பதாகக்காணோம். மானும், புலியும் ஒரே கூண்டில் தூங்கலாம் என்று நம்புகிறார்-இரண்டு பிராணிகளும் காலையில் உயிருடன் இருக்கும் என்று காமராசர் கூறுகிறார். குயிலும, கோட்டானும். சேர்ந்துகொண்டு பண் இசைக்கலாம்; கழுகின் பிடியிலிருந்து தப்பலாம் என்கிறார்.

அரசியல் அனாதைகளும் அப்பழுக்கு இல்லாத-சொல்ல முடியாத கட்சிகளும். ஒன்று சேர்ந்து-மூன்றாவது எதிரியை முறியடிக்கலாம் என்று காமராசர் கருதுகிறார்.

அரசியல் விதவைகளும், பருவக்குமரியான அரசியல் இயக்கமும் கொஞ்சிக் குலவலாம் என்று உபதேசம் செய்கிறார்.

பொது மக்களுக்கு நினைவிருக்குமென்று கருதுகிறேன். சில நாட்களுக்கு முன்னர். இந்த நாட்டு கம்யூனிஸ்டுகள்-ஐக்கிய முன்னணி என்ற பெயரில் காங்கிரஸ் ஏகாதிபத்தியத்தை முறியடிக்க எல்லா முற்போக்கு சக்திகளும் சேர்ந்து வாழ்வோம் என்றார்கள்.

இப்போது காமராசர் கரம் கூப்பி அழைக்கிறார். கனிவுடன் பேசுகிறார் அவரவர்கள் புனிதத் தன்மை கெடாமல் கம்யூனிச. ஏதேச்சாதிகாரத்தைத் தடுக்க எல்லா முற்போக்கு கட்சிகளும் கூடுவோம் வாரீர்! என்கிறார்.

அழைப்பு வருகிறது. இரண்டு பேருமே ஒற்றுமை கீதம் பாடினார்கள். ஆனால் முற்போக்கு கட்சிகளை அழைக்கும் இருவரும், தங்கள் கட்சியின் எதிர்காலத்தை மறந்துவிட்டவர்கள் போல் தோன்றுகிறார்கள்.

இருவருக்குமே, தாங்கள் அழைக்கும் முற்போக்குக்கட்சிகளுக்கு 'தனி இலட்சியங்கள், பண்பாடுகள் இருப்பதை உணர்ந்தவர்களாகக் காணோம்.

அதிலும் காமராசரின் போக்கு மிகவும் பிரசித்திமாக இருக்கிறது. அவரது ஆட்சிக்கு எதைத் தடை செய்வது, எதைத் தடைசெய்யக்கூடாது என்பதே தெரியவில்லை. ஆஞ்சநேய உபாசகர்களும், வீரஜோதிலிங்கங்களும் நாட்டிலே நடமாடுகிறார்கள். அவர்கள் மீது காமராசரின் கண்ணோட்டம் சென்றதாகக் காணோம்!

ஆனால் நாடகங்கள் தடை செய்யப்படுகின்றன. முன்கூட்டியே உத்தரவிடப்படுகிறது.

ஒரு பக்கம் ஒற்றுமை கீதம் மறுபக்கம், மாற்றுக்கட்சிக்காரர்கள் கருத்தைச் சொல்லத் தடை முற்போக்கு கட்சிகளுக்கு அழைப்பு-ஆனால் மடமையை வளர்க்கும் ஜோதிலிங்கங்கள் தொழில் நடத்த அனுமதி.

இது என்ன போக்கு! புரியவில்லையே என்ற எண்ணம் பலருக்குத் தோன்றலாம். புரியாத போக்குமல்ல' காமராசர் ஏதும் அறியாத அப்பாவி, அல்ல. அவர் அறிவார் எது சரியானது எது தடை செய்யவேண்டியது என்பதை. ஒற்றுமை கீதம் பாடுவதும் ஒழுங்கானதா என்பதையும் அவர் அறிவார்.

ஆனால் மக்களுக்கும் மற்றவர்களுக்கும் தன் போக்குப் புரியாதன்று எண்ணுகிறார்.

தான் சொன்னால் கேட்க மாட்டார்களா என்று நினைக்கிறார்.

இது வீண் வேலை என்பதை காமராசர் உணர வேண்டும். வேதனையால் இந்த நாட்டு மக்கள் நொந்துபோயிருக்கிறார்கள். 'காமராசரே' நீருமா இப்படி என்று மக்கள் எண்ணுமாறு அவர் நடந்துகொள்ளக்கூடாது; அவரது ஆட்சியின் போக்கும் அமையக் கூடாது.

—சிவப்பிரகாசம், B.A.

# இவனன்றோ கவிஞன்

பாண்டிய நாட்டின்கண் வாழ்கின்ற ஒரு பைங்கொடி, அந்தத் தென்னவனை நினைத்துக் கொண்டே ஏக்க முற்றிருந்தாள். எந் நேரம் பார்த்தாலும் அவனது நினைப்பாகவே கிடந்தாள், அந்தத் தீம்புனல் பாவை.

அன்றொருநாள் மறப்போர் புரிந்து, தூற்றியவனைப் போற்றச் செய்து, ஆணவத்தோடு எதையும் கூறலாமென எண்ணம் கொண்டிருந்த வேற்று நாட்டுக் கொடியோனின் கொட்டத்தை அடக்கி, வீர வாளோடு வீறுநடை நடந்து, வாகைமாலை சூடிவந்த பாண்டியனிடம் தனது அன்புள்ளத்தை பறிகொடுத்தாள். அதனை நினைத்து நினைத்து நாளடைவில் மெலிவுற்றாள். நற்றாயும், செவிலித்தாயும் 'அய்யோ என் குழந்தைக்கு என்னவோ?' என்று அஞ்சும் அளவிற்கு அவளின் மனப்புகை மாறியது; தலைவியின் மனத்திரையில் இருள் சூழ்ந்து நின்றது.

ஆம்! அந்த செயற்கை இருளோடு, இயற்கை இருள் முத்தமிட்டது. அவள் மேலும் துயருறுகிறாள், அவள் கழுத்திலுள்ள வெண்முத்துக்கள் அவளின் துயரத்தைக் கண்டு ஒவென அழாதவாறே இருந்தது. அவளின் கண்களில், கடலில் திரண்டுவரும் அலையை போல் கண்ணீர் திரண்டு வந்தது. அவ்வேளையில் வீசிக் கொண்டிருந்ததென்றற்காற்று அவள் உடலில் பட்டு எரிச்சல் உண்டாக்கியது போல் தோற்றமளித்தது. அந்நள்ளிரவில், அவளுக்கு எல்லாம் துயரமளிக்கும் கருவியாகவே இருந்தன. இவ்வித எல்லையில் துடிதுடித்துக் கொண்டிருந்த தலைவி, படுக்கை அறையை நோக்கிச் செல்கிறாள்...

* *

விடியற்காலம், படுத்துறங்கிக் கொண்டிருந்த தலைவி, திடுக்கிட்டு, துடிதுடித்தவாறு எழுந்தாள். காகத்தின் குரலொலியைக் கேட்டு எழுந்த அவள் தோழி, தலைவி சோகக் குறியோடு தோன்றுவதைக் கண்டாள். அவ்விருவர்க்கும் நடந்த உரையாடல்:

தோழி:—என்ன இவ்வளவு சீக்கிரம் எழுந்துவிட்டாய்?

தலைவி :—தோழி! இந்நேரத்தில் எதையும் என்னால் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

தோழி:—உன் கூந்தல்வேறு கலைந்திருக்கிறது. அதில் சூடியிருந்த முல்லை மலர்கள் உதிர்ந்து, கசங்கி இரத்தத்தைப்போல் இருக்கிறது. அதுவல்லாமல் ஏதோ நடுக்கம் கொண்டவளாய் இருக்கிறாய் ...........என்ன நடந்தது?

தலைவி —— நான் எதை எண்ணவில்லையோ, அது நடந்தது.

தோழி :— விளங்கவில்லையே.........

தலைவி :— நனவில் நல்காதவரைக் கனவில் கண்டேன் தோழி!

தோழி :— ஒன்றும் புரியவில்லையே...... என்ன சொல்கிறாய்?

தலைவி :—என் அன்புக் காதலனான தென்னவனைக் கண்டேன். அளவில்லா ஆனந்தம் அடைந்தேன்......உனக்கு அதை எப்படிக் கூறுவதென்றே புரியவில்லை.

தோழி :—என்ன ... என்ன, தென்னவனைக் கண்டாயா? அதிலும் இரவிலா? உனக்கென்னவோ ப்பைத்தியம் தான் பிடித்திருக்கிறது.

தலைவி :— உண்மை தான்! எனக்குப். பைத்தியம்தான் பிடித்திருக்கிறது. உன்னைப் போன்றவர்களுக்கு என் நிலை பைத்தியம் போல் மட்டும் தெரியாது; இன்னும் வேறு விதமாகக் கூடத்தெரியும்.

தோழி :—ஆமாம்......ஏதேனும் கனவு கண்டாயா?

தலைவி :—ஆமாம்! கனவு தான் கண்டேன். யாருக்கும் கிட்டாத வாய்ப்பு எனக்குக் கிடைத்ததுதோழி! மதம் பிடித்த யானைகளைக் கொண்டு விளங்கும் அவ்வழுதி, எனது கனவில் தோன்றி, அன்பினால் காதலின்பம் தருவதுபோல் தோற்றமளித்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் செங்காந்தள் போன்றது உன் விரல்கள் என்று முன்பெல்லாம் கூறுவாயே! அந்த விரல்களால் என் பக்கத்தில் அவனைத் தடவிப் பார்த்தேன். யாரும் காணோம்; திடுக்கிட்டேன் நினைவால் எழுந்த கனவில் நிகழ்ந்தவை தான் கூந்தலின் அலங்கோலமும், முல்லைமலரின் நிறமாறுதலும். தோழி! இன்னும் அந்தக் கனவுத் துயரம் என்னைவிட்டு ஒழிந்தபாடில்லை. ஆகவே இந்தத்துயரத்தைப் போக்குவதற்கு வழியென்ன? இதற்கொரு விடை கூறு, இல்லையேல் என்னால் இனி வாழ முடியாது; என்று தன்தோழியிடம்தலைவிஉரைக்கிறாள். இத்தகை உள்ளம்உருகுவதும், உணர்ச்சி வாய்ந்ததுமான கருத்தொத்த பாடலைக் காண்போம்.

களியானைத் தென்னன் கனவின்
வந் தென்னை
யளியா னளிப்பானே போன்
றான்–றெளியதே
செங்காந்தான் மென்விரலாற்
சேக்கை தடவந்தேன்
என் காண்பே னென்னலால்
யான்.

—முத். 24

—வே. கபிலன்.

# தெலுங்கு, கேரள, கன்னட துளு, தமிழ் எல்லை.....

சவால்விடும் நண்பர் கூறுகிற மொழிவழி எல்லைகள் ஐந்தும் சேர்ந்தால் திராவிடத்தின் எல்லையாகிறது. தொல்லை நீங்கட்டும் முதலில், எல்லைகூற எவ்வளவு நேரம்? இது சுருக்கமான விளக்கம்தான். பெருவிளக்கமே மந்த புத்தியினருக்கு மீண்டும் கொடுப்போம்.

---

ஒரு சில தினங்களுக்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணாதுரை அவர்கள் சென்னைக் கூட்டமொன்றில் பேசுகையில் தமிழரசு கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் போன்றவர்களுக்கு நாகரீகமான அரசியல் விவாதங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டினார். "எந்த தனிநபரையும் குறிப்பிட்டு கீழ்த்தரமாகப் பேசாமல் நாகரீகமானதும் கொள்கை ரீதியானதுமான அரசியலை நாம் விவாதிப்பது தான்முறை. நண்பர் ம. பொ. சி. அத்தகைய முறையான விவாதத்தில் கலந்துகொள்ள தடையேதுமில்லை. வேண்டுமானால், போதிய போலீஸ் பாதுகாப்புடன் வரட்டும், திருவல்லிக்கேணி கடற்கரையில் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில், இருசாராரின் கொள்கைகளையும் வைப்போம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இத்தகைய கொள்கை ரீதியான விவாதத்திற்கோ, அரசியல் நாகரீகமான பேச்சுக்கோ சிறிதும் உடன் படாதவர் ம. போ. சியார். கடந்த காலத்தில் எந்த அளவுக்கு நாகரீகமாக நடந்து கொண்டார் என்பதை நாம் பார்த்தோம்.

விவாதத்தில் தனக்கு நம்பிக்கை இல்லையென்றோ, தனக்கு சில அவசர வேலைகள் இருப்பதாகவோ கூறக் கூடிய நிலைமையுமில்லை. மாட்டேன் என்று கூறினால் ஏதாவது காரணம் கூற வேண்டும். எனவே, ம. பொ. சியார் ஒரு வழியைக் கண்டுபிடித்தார்! "திராவிட நாட்டுக்கு எது எல்லை என்பதை தெளிவு படுத்தாத வரையில் நான் எப்படி அவரோடு விவாதிப்பது? பெரியார் ஒரு எல்லை, அண்ணாதுரை ஒரு எல்லை, தம்பிமார்கள் ஒவ்வொருவரும் ஒரு எல்லையை கூறிக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி ஆளுக்கொரு எல்லையைச் சொன்னால், நான் எப்படி விவாதிக்க முடியும்?" என்று கேட்கிறாராம்! அத்துடன் நிற்காமல் "திராவிட நாட்டின் எல்லை எது என்று அண்ணாதுரை விளக்க முடியுமா?" என்று சமீபத்தில் நடைபெற்ற சில கூட்டங்களில் தொடர்ந்து கேட்டு வருகிறாராம்!

அவரது விஷமத்தனமான சவால்களுக்கும் நாம் பதில் தர வேண்டிய அவசியம் இல்லை. எல்லைபற்றி நம்மை நோக்கி கேள்விகேட்போரில் இருவகையுண்டு. ஒருசாரார் உண்மையில் விளக்கம் பெற விரும்புவோர். மற்றொருசாரார் அரசியல் மேதைகளென்று கருதிக் கொண்டு, நமது விளக்கத்தில் குறை கண்டுபிடித்து கூட்டம் போட்டு கும்மாளம் அடிக்கலாம் என்று கருதியிருப்போர்.

## திராவிட நாட்டின் எல்லை....

தமிழ், தெலுச்கு, மலையாள, கன்னட மொழி பேசும் நான்கு மொழி வழி மாகாணங்களைக் கொண்ட கூட்டமைப்பாகவும் மக்கட் குடியரசாகவும் திராவிடம் திகழும் என நாம் பன்முறை விளக்கி வந்திருக்கிறோம். ஒவ்வொரு மொழி வழி மாகாணமும் இஷ்ட பூர்வமான பரிபூரண சுய நிர்ணய உரிமையுடன் இருக்கும் என்றும் விளக்கி வந்திருக்கிறோம்.

அப்படியிருந்து ஆந்திரர் சம்மதித்தார்களா? கேரளத்தார் செவி கொடுத்தார்களா? கன்னடத்தார் கலந்து வாழ்வார்களா? என்ற உருப்படாத கேள்விகளை மீண்டும் மீண்டும் கேட்டு வருகிறார்கள்.

"சுயநிர்ணய உரிமையுடன் இஷ்ட பூர்வமாக திராவிடக் குடியரசு" என்ற பதங்களின் சரியான பொருளைப் புரிந்து கொண்டிருப்போர் மீண்டும் மீண்டும் அதே கேள்வியை கேட்கமாட்டார்கள். ஆந்திர, கேரள, கன்னட மக்கள் மொழியால் வேறு பட்டாலும் இனத்தால் ஒத்தவர்கள் என்பதை எடுத்துக் காட்டி, வட நாட்டின் ஆதிக்கத்தால் தென்னாடு எங்தெந்த துறைகளில் பின் தங்கி இருக்கிறது...புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்பதை எடுத்துக் காட்டி ஒன்று சேர்க்கமுடியும் என்ற நம்பிக்கையோடு பிரசாரம் செய்து வருகிறோம்.

எந்த மொழி பேசும் மக்களையும் நாம் நிர்ப்பந்த படுத்த முடியாதா? கூடாது. அது ஜன நாயகமும் ஆகாது. நமது திராவிடம் ஜன நாயகக் குடியரசாகவே திகழும்.

நமது ஆசைக் கனவு நினைவாக வில்லையானால் நமது எண்ணத்தையும் நோக்கத்தையும் யாரும் சந்தேகிக்க முடியாது. நால்வரும் சேர்ந்து வாழ்ந்தால் நலம்பல பெறலாம் என்று கூறுகிறோம்.

அரசியல் அரிச்சுவடி பயில்வோர் ஆரம்ப காலத்தில் கேட்க வேண்டிய கேள்விகளை தெளிவு பெற்ற நிலையில் உள்ளவர்களாகக் கருதப்படுவோர் சிலரும் கேட்கும்போது உண்மையில் வியப்பாகவே இருக்கிறது.

அகில இந்திய காங்கிரஸ் மகாசபை கோரியது "பாரத் வர்ஷம்"! அதாவது, பர்மா, பாகிஸ்தான் உள்ளிட்ட இந்தியா! என்ன ஆயிற்று அந்த கோரிக்கை? பர்மா பர்மியர்களுக்கு சொந்தம் என்றாகி விட்டது.

பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கென்று ஆகிவிட்டது.

இப்படி இந்தியாவை துண்டு துண்டாக வெட்டிச் சிதைத்து விட்ட போதும் காங்கிரஸை ஏன் கலைக்கவில்லை? "என்று நாம் கேட்கவில்லை. அந்த முறையில் நாம் கேட்கவும் மாட்டோம். அப்படி கேட்பது முறையும் அல்ல. ஒரு கட்சி தன் கோரிக்கையில் சீக்கிரம் வெற்றி பெறவில்லையானால் சோர்ந்து விடாது. மேலும் மேலும் போராடத்தான் செய்யும்.

இந்த உபகண்டத்திலுள்ள சகல பகுதி மக்களிடையேயும் பிரசாரம் செய்யப்பட்டு வந்த—படம் போட்டு காண்பிக்கப்பட்டு வந்த — இந்தியாவா இன்று வாழ்கிறது? மீதி இந்தியா தானே! அப்படியிருக்க நம்மைப் பார்த்து "சரியான எல்லை எது? ஆந்திரர், கேரளர், கன்னடர் சம்மதிக்கின்றனரா?" என்றெல்லாம் கேட்பதில் அர்த்தமுண்டா!

சகோதர இனத்தினர் சம்மதிக்க வேண்டுமென்பதற்காகவே நாம் பிரசாரம் செய்கிறோம். நமது பிரசாரம் இன்று தமிழகத்தில் மட்டுமே நடைபெறுகிறது என்பது உண்மையே. அது நமது இயக்கத்தின்தோல்வி யென்று கூற முடியுமா? அது நமது இயக்கத்திற்குள்ள சக்திக் குறைவுதானே தவிர நமது இயக்கத்தின் தோல்வியாகிவிடாது.

ஏதோ பதில் சொல்ல முடியாத கேள்வியை கேட்டு விட்டதாக கனவு காணும் ம. பொ. சியைக் கண்டு நாம் உண்மையில்பரிதாபப்படுகிறோம். இயக்கத்தின் சாதாரணத் தொண்டனும் பதில் கூறத்தகுந்த விஷயத்தைப் பற்றி இயக்க பொதுச் செயலாளருக்கு சவால் விடுத்தது அவரது அரசியல் தெளிவைக் குறிக்கவில்லை. அது, சிங்கத்திற்கு சிறு நரி விடுத்திடும் சவால் போன்றிருக்கிறது!

—நாதன்

# கவிஞரைப்பற்றி அறிஞர் அண்ணா!

மக்களின் கவிஞராக மாறுவது சுலபமான காரியமல்ல, மிகவும் சிரமமான இந்தச்சாதனையில்தான் முயன்று வெற்றி பெற்றிருக்கிறார் பாரதி. உயர்தர வர்க்கத்தினர் உளம் மகிழ்விக்கும் கவிஞனாவது மிகவும் சுலபம். நீலவான கடலில் மிதக்கும் வெள்ளி ஓடமான அம்புலியைப் பற்றி இரண்டு பாடல்கள் பாடினால் போதும்; கருவானத்திரை கிழித்து கண் சிமிட்டும் நட்சத்திரங்கள் குறித்துச் சில கவிதைகள் எழுதினால் போதும்; எழில் சிந்தும் மலர்களின் இனிய மணத்தைப்பற்றி இங்கிதமாக இசைத்தால் போதும் ஆற்று நீரின் சலசலப்பில் எழுந்து எதிரொலிக்கும் தாளலயம், காதல் வெறி மூண்டெழுக் கிளம்பும் குமுறல், வீரர் தம் தீரம் ஆகியவை குறித்து சொற்சித்திரம் தீட்டினாலே போதும்; கவிஞர்கள் வரிசையிலே சரியாசனம் பெற்று புகழ் விருதும் பெறலாம். ஆனால் மக்களின் கவிஞன் ஒருவன் தன் கடமையைச்சரியாய் ஆற்ற வீசியெறியப் படும் வெறுப்பு வேல்களை எதிர்த்து நடக்கவேண்டும். அபாயங்களில் முக்குளித்து எழவேண்டும். பாராட்டுதல், ஆதரவு, செல்வாக்கு குறித்தெல்லாம் சிந்திக்கவே கூடாது. ஆரம்பத்திலேயே சுப்ரமண்ய பாரதியாரின் கவித்வ மேதை பற்றியும், திறமை குறித்தும் அவரது நண்பர்களான ஒரு சிறு குழுவினருக்குத் தெரியும், அவர்கள் வியந்து புகழ்ந்தார்கள். ஆனால் ஏனைய மக்கள் அனைவரும் அவர்களது கவிஞராகிய அவரைப் பற்றி அறிந்தது அநேக ஆண்டுகளுக்கு அப்புறம்தான். அப்பொழுதுகூட ஒருவித அரசியல் மெருகேறிய ஒரு சில கவிதைகள் மட்டுமே பொதுஜனங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. மக்கள் கவிஞர் மட்டுமே கற்பனை செய்து பாடக்கூடிய அலாதித்தன்மை பெற்ற கவிதைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை. நம் நாட்டில் கவிகளுக்குக் குறைச்சலில்லை. வீட்டையும், வேலையையும் மறந்து கோயில் ஒன்றிலே துயிலில் ஆழ்ந்துவிடுகிறான் ஆடு மேய்ப்பவன் ஒருவன். நடுராத்திரி ரோந்து சுற்றும் பணிமுடிந்து ஆலய அம்மன் குடிகொண்டுள்ள கோவில் திரும்புகிறான். அப்பாவியான ஆடுமேய்ப்பவனைக் கண்டதும் அவள் அதரங்களிலே குறுநகை நெளிகிறது. அவனை ஒரு கவிஞனாக மாற்ற வேண்டும் என்ற விசித்திர எண்ணம் தோன்றுகிறது. கையிலுள்ள மந்திரக்கோலால்மெதுவாகத் தட்டுகிறாள். விளைவு, அப்பாவி அற்புத கவிஞனாக மாறுகிறான். இத்தகைய கதைகள் மக்களுக்கு மிகவும் பரிச்சயமானவை. தேவதையின் திருக்கர ஸ்பரிசத்தால் கவிஞனானவன் அந்தத் தேவதை குறித்தோ, அல்லது கடவுளர் அடங்கலுக்குமோ தன் நன்றியைத் தெரிவிப்பதற்காக தேவமாக்கதைகள், துதிப்பாடல்கள் பாட வேண்டுவது கடமை. இந்த கருத்து பேய்ப்பிடியாகப்பற்றி ஆட்சி செலுத்திய காரணத்தால் மக்களுக்கு அவர்கள் நலனுக்காகப் பாட்டிசைக்கும் புலவன் ஒருவன் கிடைத்த போதுகூட அவனை நேருக்கு நேர் சந்திக்க முடியவில்லை. 'நான்தான் மக்கள் கவிஞன். அவர்களுக்காக அவர்களைப் பற்றி நான் பாடுகிறேன், காரணம் நானும் அவர்களுள் ஒருவன்' என ஒருவன் துணிந்து சொன்னால் ஜனங்கள் சந்தேகக் கண்களுடன் வெறுப்புடன் அவனைப் பார்ப்பார்கள். அவனுக்கு அங்கீகாரம்கிடைக்காது. எத்தனைக் கெத்தனை அவனது கவிதைகள் புரட்சிக் கருத்துக்கள் பொதிந்தனவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமான எதிர்ப்பை அவன் சமாளிக்க வேண்டியிருக்கும். இத்தகைய அபாயச் சூழலில், நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையுமாக, உள்ளந்தளராமல் பாரதியார் நடந்து செல்வதை நாம் காண்கிறோம்.

## சீர்திருத்த வானத்தில் ஒளிவடித்த விடிவெள்ளி!

இரு யுகங்கள் மோதும் எல்லை பாரதி தோன்றிய காலம். பிறந்த ஊரில் பூர்ண கும்ப மரியாதைகள் பெற்று பிரபுத்வ ஆட்சி கொலுவிருந்தது. குடிசைகள்சூழ மையத்தில் நிமிர்ந்து நின்றது எட்டையாபுரத்தில் மன்னரின் மாளிகை, பழையஜாதிப் பாகுபாடுகளின் ஆட்சி ஆதிக்கம் குன்றவில்லை அப்போது. அவரும் ஜாதியில் பிறப்பால் பிராமணர். பிரபுத்துவத்திற்கும், வைதீக சனாதனத்திற்கும் ஊடே நவீன நாகரிகம் தலை நீட்டிக்கொண்டிருந்தகாலமும் அவர் தோன்றிய சமயந்தான் புரட்சி பூத்துக் கொண்டிருந்தது. இயந்திர உலகில் சோகமும்வெறுப்பும் மின்னும் கண்களுடன் சமுதாயம் பழைமை முறை, புதியஅமைப்பு முறை நுழைவதைப் பார்த்துக் கொண்டிருந்தது. புது யுகத்தின் கண்களிலே பழமைக்குச் சவால்விடுக்கும் மிடுக்கு இருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் தான் பாரதி தோன்றினார். பழைய யுகத்திற்கும் புதுயுகத்திற்கும் நடக்கவிருக்கும் போராட்டத்தில் தானும் ஒரு விரனாகப் பங்கு கொள்ளலாம் என அவர் கருதியிருக்கவும் கூடும். பழைய சமுதாய அமைப்பு முறையிலே அவரது ஸ்தானம் பந்தோபஸ்து நிறைந்தது. வசதிகள் மலிந்தது.

பாரதி பிறந்த இந்த நாடு முரண்பாடுகள்செறிந்த களம் அகந்தையும், பணிவும், கொடூரமும் அன்பும் நாட்டிலே ஒருங்கேகுடிகொண்டிருந்தன. செயல்திறம் நாட்டிலே ததும்பிக் கொண்டிருந்தது. அதே வேளையில் மக்கள் மனங் குலைந்து. செயலற்றவர்களாகும்படி செய்யும் அபத்தக்கற்பனைகளும் அபரிமிதமாக உலவியது. பகட்டான கற்பனைகள், பல்லாயிரக் கணக்கான ஊமை மக்கள், அறிவு மயங்கி ஆழ்ந்த நிலை, பயமும் சூரத்தனமும், பக்கத்திலே பக்கத்திலே கொலுவிருந்த தன்மை, பக்தியும் பயமும் பாசறை கொண்டிருந்த காட்சி அனைத்தின் உறைவிடமாகவும்திகழ்ந்தது நாடு. பைரனும், பார்க்கும் இந்த நாட்டிலே அச்சமயத்தில் தான் கால் பாவினார்கள். அவர்களை வரவேற்க நாட்டிலே இருந்தவை பாரதமும் பாகவதமும்தான். துப்பாக்கியும் பீரங்கியும் முழங்கி நாட்டுமக்களின் காதுகளிலே ரீங்காரம் செய்தன. முரண்பாடுகள் மலிந்த இந்த நிலப்பரப்பிலே அவற்றோடுகோவில் நகராக்கள் கலந்து முழங்கிய முழக்கம் ஓயவில்லை. பாரதி தோன்றினார். ஆனால் நாட்டின் இயல்பிற்கிணங்க சரித்திரம் ஆமை வேகத்தில்தான் நகர்ந்து கொண்டிருந்தது. சரித்திர ரதத்தை துரித கதியிலேசெலுத்தப் பலமாக் தடிபோட்டு எழுப்ப வேண்டி இருந்தது. பாரதியின் சிறப்பு அவர் அத்தகைய தடிபோட்டு எழுப்பும் பணியில் ஈடுபட்டதில்தான் இருக்கிறது. மக்களின் கவிஞராக மாறி மகத்தான முறையில் அவர் அப்பணியைச் செய்தார்.

பாரதி வெறும்தேசியக் கவிஞர்அல்ல. சீர்திருத்தவானிலே மின்னிய விடிவெள்ளி அவர். அந்நியன் மீது அவருக்கு ஆத்திரம். நாடு அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என விரும்பினார் அவர். அதுமட்டுமே அவர் லட்சியமாக, தீர்மான முடிவாக இருந்துவிடவில்லை. அதுதான் அவரது லட்சியத்தின் ஆரம்பம். அன்னிய ஆட்சியினின்று விடுதலைபெறுவதுடன் நாட்டு மக்கள் அவர்களைப் பிணைத்து இறுக்கும் தலைகள் அத்தனையையும் தகர்த்து எறிந்து உண்மைச் சுதந்திர புருஷர்களாக விளங்கவேண்டும் என விரும்பினார் அவர். உலக மக்களின் முன்னிலையில் உன்னத உயர்வு பெற்றுத் திகழவேண்டும் என அவாவினார். புதிய விழிப்புப்பெற்று புதுமை ஆண்களாகவும், பெண்களாகவும் நாட்டு மக்கள் நடமாடும் காட்சியைக் காண ஆசைப்பட்டார். மக்களைப் பீதிப் போர்வை முக்காடாகக் கவிழ்ந்து மறைத்திருப்பது அவர் பார்வையில் பட்டது. அச்சம் அணிசெய்யும் முகத்தினராகக் கண்டார் மக்களை. தொட்டதற்கெல்லாம், எடுத்ததற்கெல்லாம் நாட்டு மக்கள் பயந்து செத்தனர். அன்னியனையும் அவனது துப்பாக்கி தோட்டாக்களையும் கண்டு மட்டும் அஞ்சி ஒடுங்கி நடுங்கவில்லைஅவர்கள். சக மனிதர்சிலர் முணுமுணுக்கும் மந்திரங்கள் சுலோகங்கள் முன்பும், பம்மி மரியாதை செய்து வாழ்ந்தார்கள். பிசாசுகள் பூதங்கள் என்று அவர்களை எவ்வளவோ குலைநடுங்கச் செய்தன.

இத்தகைய மனிதர்கள் சுதந்திரக் கொடி உயர்த்தும் மக்களாகத் திகழ முடியாது, இத்தகையோர் வாழும் நாடு தலை நிமிர்ந்து, உலகத்தின் இதர நாடுகளுக்குச் சரிசமமாகப் பார்வை எறிய முடியாது, அன்னிய ஆதிக்கத்தை அகற்றிய பின்பும் கூட இது சாத்தியமில்லை என்பதை அவர் உணர்ந்தார். அதனால் நாட்டு

## மாளிகையை விட்டான்; மண் குடிலைத் தொட்டான்!

# ஆட்டுக்காரன் பாட்டுக்காரன் ஆன கதையல்ல!

மக்கள் முதலில் அச்சத்தை அடித்துத் துரத்நவேண்டும். என அவாவினுர். தாழ்வு மனப்பான்மையைத் தூவென்று உதறித் தள்ள வேண்டும் என்று தூண்டினுர் மக்கள் மனதிலே நம்பிக்கையையும் தைரியத்தையும் விதைத்தார். அவர்களுள் மறைந்து கிடக்கும் மாபெரும் சக்தியைப் புலப்படுத்தினுர். அந்த மகத்தான பலம் எவ்வாறு வீர்யமாகிறது. மக்களின் தூங்கு மூஞ்சித் தன்மை அறியாமை, மூட நம்பிக்கைகள், தாழ்வு மனேபாவம் ஜாதீய வெறி காரணமாக எவ்வளவு வியர்த்தம் விளேகிறது என்பதை விளக்கினுர். சிந்தனைத் தெளிவுடன் பாரதி நிலைமையை ஆராய்ந்தார். நாட்டில் உலவும் தீமைகளை வேரோடு கெல்லிஎறிய முனைந்தார். மக்கள் நலனில் அக்கரை கொண்ட மக்கள் கவிஞரைத் தவிர யாரும் அவ்வளவு முயற்சி எடுத்திருக்க முடியாது. பாரதியாருக்குத் தெரியும் ஜனசக்தி ஆட்சி செய்யத் தொடங்கும் யுகம்

## இரு யுகங்கள் மோதும் எல்லையிலே நின்றான்!

இந்த யுகம் என்பது. மக்களே மன்னர்களாக மாறும் காலம் இது என்பதை அவர் அறிவார். எனவே அத்தகைய சுதந்திரத்திற்காகப் போராடும்படி பொது மக்களை அவர் தூண்டினுர்.

கடவுளர்களுக்குப் பாமாலை பதிகங்கள் பாடுவதோடு நின்றுவிடவில்லை பாரதி. மண் ஆளும் மன்னவர்களுக்கு விண்ணப்பப்பாக்கள்எழுதி விடுக்கவில்லை, உழவு சால் ஓட்டும் சாதாரண உழவனுக்குப் பாட்டுப் பாடினுர். தொட்டில் ஆட்டும் தாய்மார்கள், விளையாட்டுவெளிகளிலே ஓடிவிளையாடும் குழந்தைகளுக்குக் கவிதைகள் இசைத்தார். கடந்த காலப் புலவர் சிகாமணிகளைப் போல வேதாந்த வியாக்கியானங்களைச் சுதந்திரக் கோரிக்கைகளுக்குச் சப்பைக் கட்டாக உபயோகிக்கவில்லை. உலகத்தின் தூர தொலைவிலுள்ள நாட்டு மக்களின் சுதந்திரப் போராட்டங்களைக் கவிதைகளாக்கி மக்களுக்குச் சமர்ப்பித்தார். இத்தாலிய சுதந்திர உதயத்தை, மாஜினி என்ற தேசீய வீரனின் சலியா உழைப்பால்மக்கள்புத்துயிர்ப்புப் பெற்று உரிமைப் போரில் வெற்றிகரமாக ஈடுபட்டதை உன்னதச் சொற்சித்திரமாகத் தீட்டிக் கொடுத்தார். புரட்சிக்குப் பின் உருவான பிரஞ்சு நாட்டுக் காட்சியைப்பாடினுர். ஜாரின் தளைகளைத் தகர்த்து நொருக்கி வீறுடன் எழுந்து நின்ற ரஷ்யாவைப் பற்றிப் புதுமை ஓவியம் தீட்டினுர். சுதந்திர பெல்ஜியம், பிரான்சு, சிகப்பு ரஷ்யா குறித்த சொற்சித்திரங்களோ அவர்மக்களுக்குப் பரிசாக அளித்தது. இந்திரலோக, பிரம்மலோகக்காட்சிகள் பற்றிய அளப்புகளை அல்ல. பிஜித்தீவு வாழ்வு பற்றிய பேனுச் சித்திரத்தை மக்கள் முன் வைத்து, பாருங்கள் சகோதரர்களே உம்முடன் பிறந்த சோதரர் நிலையை எனக் காட்டினுர். ஆங்கில நாடகாசிரியன் ஷேக்ஸ்பியரின் தன்மையிலே, மக்கள் கவிஞனின் லட்சணம் அதுதான். தன் நாட்டு மக்களின் முட்டாள்தனத்தையும், குற்றங் குறைகளையும் சுட்டிக் காட்டத் தயங்கமாட்டான் மக்கள் கவிஞன். சிந்தையிலும்செயலிலும் அவர்கள் எவ்வளவு பிற்போக்கானவர்களாக இருக்கிறுர்கள், அதேவேளையில் உலகத்தின் இதர நாடுகள் எவ்வளவு வேகமாக முன்னேறுகின்றன, எவ்வளவு சிறப்பாகச் செயல் புரிகின்றன. அங்கெல்லாம் வாழ்வு எப்படி வளம் பெறுகிறது என எடுத்துக் காட்ட அஞ்ச மாட்டான். வாழ்க்கை வசதிகள் பெற்று மேட்டுக்குடிகளாகத் திகழ்ந்தவர்களைக் கண்டு தொடை நடுங்கவில்லை. பாரதி அவர்களது தவறுகளையும் தயங்காமல் மக்கள் முன் வைத்தார். வஞ்சகத்தையும், துரோகத்தையும் அவற்றின் உண்மை சொரூபத்திலே கொணர்ந்து நிறுத்தினுர். ஒப்பற்ற தீரம், அளவற்ற உற்சாகத்தோடு இத்தகைய பணி புரிந்தார் அவர்.

பாரதியை தேசீயக்கவி என அளவுக்கு அதிகமாகப் பாராட்டுவதில் அதிக அக்கரை காட்டுகிறுர்கள் ஒரு சாரார். கவிஞர் மீதுள்ள காதல் அல்ல காரணம். இப்படிச் சித்தரித்துக் காட்டுவதன் மூலம்கவிஞரின் மற்றொரு தன்மையை அதாவது பாரதி மக்களின்கவிஞர் என்ற உண்மையை— மறைத்து விடலாம் என்பது அவர்கள் எண்ணம். சுற்றி வேலி கட்டிக்கொண்டு அந்த எல்லைக்குள் அடங்கி ஒடுங்கி விடுபவையல்ல பாரதியாரின் பாக்கள். வேதாந்த, தேசீய சிமிழ்களில் அவற்றை அடைக்க முடியாது. புராதன சம்பிரதாயங்களின், புராணக்கற்பனைகளின் ஊழல்களை அம்பலப்படுத்த அவர் அஞ்சவில்லை. பழமைப் பாதுகாவலர்களாக, சம்பிரதாய உடும்புகளாக விளங்குபவர்களைநோக்கி ஆவேசமாக எறிகிறுர் அவர் சுடு சொற்களை, 'ஏ முட்டாள்களே! வெகுகாலமாய் நிலவி வருகிறது என்ற ஒரு காரணத்திற்காகச் சில விஷயங்கள் உன்னதமானவை, உண்மையானவை என்று சாதிக்க வாடா வருகிறீர்கள்? பொய்யும், புளுகும் யுக யுகாந்திரமாகத்தான் உலவி வருகின்றன. அவை உயர்ந்த பண்புகள், ஆகவே அவசியம் எல்லோராலும் அனுஷ்டிக்கப்பட வேண்டியவை என ஒப்புக் கொள்ளத் தூண்ட முன் வருவீர்களா?'

புராதன காலத்தில் அறியாமையும், குள்ளக் கருத்துக்களும் இல்லவேஇல்லை என்று எண்ணுகிறீர்களா? நீங்கள் செத்த சிந்தனைகள் என்ற பிணத்தை ஏன் இன்னும் நீங்கள் கட்டி. அழ வேண்டும்? நிகழ் காலத்தில் வாழ்ந்துஎதிர் கால வாழ்விற்கு வகை செய்யுங்கள். இறந்த கால அந்தகாரத்தில் துவழ வேண்டாம். கடந்த காலம் கடந்து போனதுபோனதுதான். சென்றது இனி மீளாது. இது பாரதி வாக்கு. இங்கே தான் மக்கள் கவிஞரை நாம் சந்திக்கிறேம். வாழ்வோடு ஒட்டிய ஒழுக்க முறையை மக்கள் சமுதாயத்திற்காக அமைத்து கொடுத்துள்ளார் அவர். புராணக் கோட்பாடுகளைப் போல மண்ணேடு ஒட்டாத சித்தாந்தம் அல்ல அவர் காட்டும்வழி மக்களுக்கு ஒரு புதிய விழிப் பூட்டினுர். உலகம் மாயை என்ற சாக்குருவி வேதாந்தம்- பாழுலகம் பொய்யே பரமபதம் போ என்ற படுபாடாவதி பண்பாடு-மக்களிடையே பரவுவதைத் தடுத்தார். அத்தகைய நம்பிக்கையை கண்டு சிரித்துத் துப்பினுர். ஆசிரமவாசிகளுக்கு ஆத்திரம் வரச் செய்தார். விளைவு என்னுகுமோ என வீண் பீதி கொள்ளவில்லை. அத்தகைய சோம்பேறி வேதாந்தங்களில் ஊறிய மக்கள் உதவாக்கரைகளாக, ஒன்றுக்கும் உதவாத பிற்போக்கு வாதிகளாக ஆகிவிடுவார்கள் என்பது அவர் கொள்கை.

பசி, வறுமை, அறியாமை முதலியவற்றை அவரால்சகிக்கமுடியாது. பணக்காரர்களின் கொடுமையைப் பலமாகச் சாடுகிறுர் அவர். தனி ஒருவனுக்கு உணவுஇல்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் எனக் கர்ஜிக்கிறுர். வாழ்வு வசதிகள் அனைத்தும் பெற்று மக்கள் வாழ வேண்டும், வர்த்தகம் வளமாகவேண்டும், இயந்திரத் தொழில்கள் பெருகவேண்டும், புது யுகத்தின் நலன்களெல்லாம் நாட்டிலே குவிய வேண்டும் என்றெல்லாம் விரும்புகிறுர். பூசாரித்தனமும், சுலோகஙளேயும் அவரது மதக் கோட்பாடுகள் அல்ல. மக்களுக்கு உழைத்தலே—சகோதர ஜீவர்களின் பணி புரிவதே—அவரது மதம்.

மக்கள் கவிஞனை எதிர் நோக்கி நிற்கும் பிரச்னைகள் மகத்தானவை. புதிய உண்மைகளை மக்கள் உணரும்படி செய்வது, புதுப் பாதையிலே அவர்கள்நடைபோடத்தூண்டுவது, புதியநோக்கிலே விளைவுகளை எடைபோட அவர்கள் முயலும்படி செய்வதுஎல்லாம் மக்கள் கவிஞனின் வேலை. ஜோதிடனது பிணைப்பிலிருந்து விடுவித்து நாட்டு மக்களை வானசாஸ்திரி பக்கம் திருப்புவது, ரசவாதியை அவர்கள் மத்தியிலிருந்து துரத்திவிட்டு ரசாயனவாதியை கொணர்ந்து நிறுத்துவது, எல்லாம் அவன் வேலை. மதகுருவை விலக்கிவிட்டு அறிவுக் கண்திறக்க உதவும் ஆசானை நாடச் செய்வதும் அவன் வேலைதான். செப்பிடு வித்தைகள், மந்திர தந்திரங்கள் மூலம் வியாதி ஓட்டுபவனை ஓட்டிவிட்டு மருந்துகள் மூலம் சொஸ்தப்படுத்தும் மருத்துவனுக்குவழிவகுத்துக் கொடுக்க வேண்டியவ

**எல்லோர்க்கும் கொடு, வளத்தை; இல்லையேல் அழி, சகத்தை!**

# வெறியர்கள் முயற்சி!

## கருவிலேயே கருகிடுமோ?

கடந்த சில நாட்களாக உலக அரங்கில் எல்லா நாடுகளின் ராஜ தந்திரிகளாலும் ஒரு முக்கிய பிரச்னை விவாதிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பிரச்னை உலகில் மீண்டுமொரு போர் துவக்கப்படுமோ என்ற கவலையை உலகமக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

ஆசியாவில் அடிமைப் பட்டுக் கிடந்த சீனு, இந்தியா, பர்மா, இலங்கை, இந்தோ—சீனு, இந்தோனேஷியா இப்படி பல நாடுகளும் அந்நியர் பிடியிலிருந்து விடுபட்டிருக்கின்றன. மேலும் தென்கிழக்கு ஆசியாவில் பல நாடுகளும் அந்நிய ஏகாதிபத்திய பிடிகளை தகர்த்தெறியப் போராடிக் கொண்டிருக்கின்றன.

தென்கிழக்கு ஆசியாவிலுள்ள சில நாடுகளில் சுதந்திரம் என்ற பெயராலும், குடியரசு என்ற பெயராலும் பொம்மை சர்க்கார்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அங்கே அந்நியன் ஆளவில்லை என்பது உண்மைதான். ஆனால், அந்நிய ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரச் சுரண்டலும், உள் நாட்டு பிரச்சனைகளில் தலையிடுதலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதற்கு தென் கொரியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகியவை எடுத்துக் காட்டுகளாம்.

நாளுக்கு நாள் காட்டுத்தீ போல படர்ந்து வரும் இந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது அமெரிக்கா. அதற்கு மார்க்கட்டுகளாக இருந்த இடமெல்லாம் தேய்பிறையாகி வருகிறது. விரைவில் எஞ்சியுள்ள மார்க்கட்டுகளுக்கும் ஆபத்து சூழ்ந்து விடக்கூடு மென்பதை அமெரிக்கா நன்கு உணர்ந்து விட்டது.

தென்கிழக்கு ஆசியாவிலுள்ள எந்த நாட்டில் விடுதலைக் கிளர்ச்சி நடந்தாலும், அமெரிக்கா அதில் தலையிடாமல் இருந்தது கிடையாது. விடுதலைக் கிளர்ச்சி செய்பவர்கள் யாரானாலும் அவர்களை கம்யூனிஸ்டுகள் என்று குற்றஞ் சாட்டி நசுக்க முன் வருகிறது. ஒரு நாடு இன்னொரு நாட்டின் உள்நாட்டு விஷயத்தில் தலையிடக் கூடாது என்பது சர்வதேசிய விதி. இதை இன்றுவரை அமெரிக்கா மதிக்கவேயில்லை என்பதற்கு ஆயிரமாயிரம் ஆதாரங்கள் காட்ட முடியும்.

1949-ல் சீனு சியாங்கே ஷேக் சர்வாதிகாரத்திலிருந்தும் அமெரிக்க அந்நிய ஏகாதிபத்திய சுரண்டலில் இருந்தும் விடுபட்டது. உடனே அமெரிக்கா சீனு மீது போர் தொடுக்க சகல முஸ்தீப்புகளையும் செய்தது. பார்மோசா தீவில் பதுங்கியுள்ள சியாங்-கே-ஷேக்கை முன்னிறுத்தி சீனு மீது பாய்வதற்கு 10 லட்சம் படைகளுக்கு பயிற்சி அளித்தது, இன்று வரை பார்மோசா ராணுவக் கூடாரமாகவே இருந்து வருகிறது.

சீனு மீது படையெடுத்தால் சீனமக்களின் எதிர்ப்பை சமாளிக்கமுடியுமா என்ற சந்தேகம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டதால் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள ஏனைய நாடுகளையும் துணைக்கு அழைத்துக் கொள்ளலாம் என்று கருதிக்கொண்டு 1950ம் ஆண்டு பிலிப்பைன்ஸில் பசிபிக் மாநாடு ஒன்றை கூட்டிற்று. கம்யூனிஸ்டு நாடுகளுக்கெதிரான அம்மாநாட்டில் இந்தியா உட்பட பல நாட்டுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். என்றாலும் அமெரிக்காவின் சதித் திட்டத்திற்குப் போதிய ஆதரவு கிடைக்காமல் போய்விட்டது, ஒரு மிக்க கருத்துக்கள் எப்படி நிலவமுடியும்? ஆசிய மக்களுக்கு எதிராக ஆசிய மக்களையே மோதவிட்டு வேடிக்கை பார்க்கும் இந்தச் சதியை புதிய சீனத்தின் தலைவர் மா-சேதுங் பகிரங்கமாக கண்டித்தார். சீனுமீது அமெரிக்கா படையெடுத்தால் இதை முறியடிக்க சீனமக்கள் தயாராக இருக்கிறார்கள் என்றும் 30 ஆண்டுகளுக்கு மேலாகவும் தொடர்ந்து போராடத் தகுந்த வசதியும்சீனமக்களுக்கு உண்டென்றும் கூறி எச்சரித்தார். உண்மையாகவே இந்த எச்சரிக்கை அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கு மிகுந்த அச்சத்தை உண்டு பண்ணிவிட்டது.

என்றாலும் அமெரிக்கா சீனுவை அடிமைப் படுத்த வேண்டும் என்ற நப்பாசையை மட்டும் கைவிடவில்லை. பார்மோசாவிலுள்ள சியாங் படைகளின் பேரால் அமெரிக்க ராணுவத்தையும் ஆயுதங்களையும் பயன் படுத்தி சீனுவைக் கைப்பற்ற திட்டமிட்டிருக்கிறது.

வெறும் ஆயுதங்களால் ஒரு நாட்டை அடிமை கொள்ள முடியாதென்பதை "வடகொரியா" போதித்திருப்பதால் போதிய படைபலமும் தேவை யென்று கருதி "தென்கிழக்கு ஆசியா பாதுகாப்பு மாநாடு" என்ற பெயரால் மீண்டும் அதே பிலிப்பைன்ஸிலுள்ள மணிலா நகரில் ஒரு (கம்யூனிஸ்டு நாடுகளைச் சாராத நாடுகளின்) மாநாட்டை கூட்ட ஏற்பாடு செய்து வருகிறது. அமெரிக்காவின் மாடல் காலனி எனும் சிறப்புப்பெயர் பெற்ற அந்த பிலிப்பைன்ஸில் இதற்கென்று ஸ்தாபனமும் நிரந்தர தலைமை காரியாலயமும் (Secretariate) ஏற்படுத்தமுடிவுசெய்துள்ளது அமெரிக்கா. இதற்குத்தான் "சீட்டோ" (SEATO-South SEast Asia Treaty OrganiSation) என்று பெயராம்! இதுதான் தென்கிழக்கு ஆசியாவை பாதுகாக்கப் போகிறதாம்!

—நாதன்

---

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

### கவிஞரைப்பற்றி அண்ணு

னும் மக்கள் கவிஞனே. மூட நம்பிக்கைகள் நிர்மூலமாக்கப் பட வேண்டும், விஞ்ஞானம் விருத்திபெறுவதற்காக. சுருக்கமாகச் சொல்லப் போனுல் ஒரு புரட்சிக்காரனுக மக்களின் கவிஞன் இயங்க வேண்டும். கொடுங்கோலனை வாழ்விக்க வந்த வானகத் தூதன் என்றும் வாழ்விக்க வந்தவனை கொடுங்கோலன் எனவும் மக்கள் சுலபமாக நம்பிவிடுவார்களாதலால் மக்கள் கவிஞனின் வேலை சிரமம் மிக்கதாகிறது. பாரதியார் பயமின்றிப்போராடினுர்: அவர் நடத்திய போராட்டம் முடியவில்லை. அதற்குள்ளாகவே அவர் மறைந்துவிட்டார். அவர் சிந்தனைப் படைபலத்தை நமக்கு உதவியுள்ளார். அதன் துணை கொண்டு போர்ாட்டத்தை நாம் வெற்றிகரமாக முடிக்க முடியும். மக்கள் கவிஞருக்கு நாம் வழங்கும் மகத்தான மரியாதை அவர் நடத்திய போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதுதான். உக்கிரமாக, உன்னதமான போக்கில் மக்கள் சுதந்திரத்திற்கான போராட்டம் நடைபெறவேண்டும். வேண்டிய வீரர்கள் இருக்கிறுர்கள். வெற்றி காணுவது நிச்சயம்.

---


கருத்துக் கனிகள் தரும் காவியச் சோலை!

**அருவி**

(தி. மு. க. இலக்கிய மாத இதழ்)

**ஆசிரியர்: சித்தார்த்தன் B. A.**

**செப்டம்பர் 15-ந் தேதி வெளிவருகிறது!**

தனியிதழ் விலை 4 அணு ஆண்டு சந்தா ரூ. 3

விவரங்களுக்கு:

**அருவி**

பாரிஸ் ஹால்

வண்டிப் பாளையம் ரோடு

திருப்பாதிரிப்புலியூர்

# தமிழால் பாரதி தகுதி பெற்றதும்...

# தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்!

என்றுமுள தென்தமிழ்—சீரிளமைத் தமிழ் — தெள்ளு தமிழ்—தித்திக்கும் முத்தமிழ்—செந்தமிழ் என்பன போன்ற 'ஆயிரந்திருநாமம்' கூறிப் போற்றிப் புகழப்படும் தமிழை நினைக்கும் போது நமக்கு, 'உய்வகை காட்டும் உயர் தமிழுக்குப் புது நெறி காட்டிய புலவன் பாரதி'யின் நினைவும் ஒரு சேர எழுவதியல்பு.

'தமிழரின் உயர்நிகர் தமிழ் நிலை தாழ்ந்ததால் இமை திறவாமல் இருந்த நிலையில் தமிழகம் தமிழுக்குத்தகும் உயர் வளிக்கும் தலைவனை எண்ணித்தவம் கிடக்கையில்' வந்துதித்த 'பைந்தமித் தேர்ப்பாகன்' பாரதியார்-இடரற்ற நல் வாழ்வைத் தமிழர்க் கீந்தும், இணையற்ற பெரும் புகழைத் தமிழுக்கீந்தும், கெடலெங்கே தமிழன் நலம் என்று கேட்டுக் கிளர்த்தெழுந்தவர், கவிதைக்குயில் பாரதியார் என்றால் அது வெறும் புகழ்ச்சியில்லை!'

பாரதி பிறந்த காலத்தில், அரசியல் வாதிகள் ஆங்கில மோகம் கொண்டே திரிந்தனர் தமிழில்பேசுவதுகூட இழுக்கு எனக் கருதினர். தமிழ்ப் புலவர்களோ, 'இலக்கியத் தமிழ்' என்று கூறி, அதைத் தங்களின் தனியுடைமையாகக் கருதி பொதுமக்கள் பேசும் தமிழோடு இயைந்து வாழத் தடைக்கற்களாயினா. தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோள்கள் உண்டு'எனக் கூறிப் பேச்சுத் தமிழும், இலக்கியத் தமிழும் ஒன்றோடொன்று இணைந்து கலந்து வளர்ந்து மக்கள் வாழ்க்கைக்கு நலம் புரியும் வகையிலே தமிழ் நிலையைத் தம்வாழ் நாளிலேயே மாற்றியமைத்து மறுகோலம் செய்தார் பாரதி. தமிழ் எழுத்துக்கும், தமிழ்க் கவிதைக்கும் புத்துயிர்கொடுத்த சித்தர் அவர்; தமிழை நினைத்ததும் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மகிழ்ச்சிப் பெருங் கடலில் திளைக்கும் படியான நிலைமையை உண்டாக்கியவர் அவர் என்பதை மறுத்தற்கியலாது. வங்க மொழியினை வளஞ்செய்யப் பிறந்தவர் தாகூர்; உருதுமொழிக்கு ஊட்டமளிக்கப் பிறந்தவர் இக்பால்; மலையாள மொழியினை மாண்புறச் செய்யப்பிறந்தவர் வள்ளத்தோல்; அதுபோல தமிழுக்குத் தகுமதிப்பும் உயர்வும் ஏற்படுத்தப் பிறந்தவர் பாரதியார். எனவே, தமிழை நினைத்தால் பாரதியின் நினைவும் உடனெழத்தானே செய்யும்!

'தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பின ளாமெங்கள் தாய்.''

என்று பாரதி தமிழைப் பற்றிக் கூறும்போது தமிழர்க்கு மெய் சிலிர்க்கத்தானே செய்கிறது!

உலகப் பெரு மொழிகள் என விளங்கிய கிரீக், இலத்தீன், ஆரியம் என்றும் சமஸ்கிருதம் முதலியன உலக வழக்கு அழிந்தொழிந்து சிதைந்தன. எனினும், என்றுமுள தென் தமிழ் மட்டும் நேற்று நிலவிற்று. இன்று நிலவுகிறது-என்றும் நிலவும் என்பது உறுதி. எனவே, வேறு எம்மொழிப் புலவரும் தம் தாய் மொழி மாட்டுக் கொண்டிருந்த அன்பைவிடத் தமிழ்மொழியிடத்துப் பாரதி கொண்டிருந்த அன்பு 'மலையினும் மாணப் பெரிது!' தமிழ்க் காதலில் ஊறித் திளைக்கும் பாரதியார்,

''யாமறிந்த மொழிளிகலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்',

என்று கூறும்போது தேன் மாந்திய வண்டுகளாகவே நாம் ஆகிவிடுகிறோம் அல்லவா? இந்த நிலையில் நம்மை நிறுத்தி வைக்கவில்லை. பாரதி களிப்பில் காரியத்தை மறந்து விடாதே என்று கூறி, நம் பிடரியில் கை கொடுத்து முன்னே தள்ளி விடுகிறார். தமிழ் வாழ வழி செய்—தமிழ் வளர வழி செய்—தமிழைத் தரணி யெல்லாம் பரப்ப முற்படு என்கிறார். இதோ பாருங்கள்.

''தேமதுரத் தமிழோசை உலக மெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்;
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்''
''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்''

இனி, 'தமிழில் என்ன இருக்கிறது? இதைத் தமிழில் சொல்ல முடியுமா? எழுத முடியுமா? தமிழில் கலைச் சொற்கள் உண்டா?' என்று கேட்கும் பிரகஸ்பதிகளைக் கண்டு நெஞ்சம் குமுறுகிறார் பாரதி.

''புத்தம் புதிய கலைகள்—பஞ்ச பூதச்செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.''
''சொல்லவுங் கூடுவதில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ் மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்.''
''என்றந்தப் பேதை யுரைத் தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ?
சென்றிடு வீரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்!'.

என்கிறார். பாரதி கூறுகிறபடி செய்தால், தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கமரரர் சிறப்புக் காண்பார்' என்பதிலே துளியும் ஐயமுண்டா? எனவே.

''வான மளந்த தனைத்து மளந் திடு
வண்மொழி வாழியவே!
''ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
''எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!''

என்று பாரதியாருடன் சேர்ந்து தன் 'தன்னேரில்லாத தமிழை நாமும்வாழ்த்துவோம் வணங்குவோம். 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத் தொழுது படித்திடடி பாப்பா' என்று பாடுவோம்.

* * *

'மொழி நாட்டின் விழி' என்ற பேருண்மையை நன்குணர்ந்த பாரதி தமிழர்க்கு ஊட்டிய மொழிப்பற்றை விட நாட்டுப் பற்று துளிக் கூடக் குறைவானதல்ல. எனவே, செந்தமிழ் நாட்டைத் தேனுக்கிக் காட்டுகிறார்,

செந்தமிழ் நாடெனும் போதி னிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே.

என்ற பாடலின் மூலம்.

''நீலத்திரைக் கடலோரத்திலே—நின்று
நித்தந் தவஞ்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றி டையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு.''

என்று தமிழ் நாட்டின் புகழைப் பாடுகிறார்.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே என்று கூறி இவற்றைத் தமிழர் உள்ளங்களிலே நாட்டுப் பற்று வீறிட்டெழச்செய்கிறார்.

''செல்வம் எத்தனையுண்டோ புவிமீது—அவை
யாவும் படைத்த தமிழ்நாடு''

எனத் தமிழகத்தின் வளத்தை உணர்த்தி நம்மையெல்லாம் மகிழ்விக்கிறார். தமிழர் பெருமையைப் பற்றிக் குறிப்பிடும் போதே,

''விண்ணை யிடிக்கும் தலையிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்''

என்று பாடுகிறார்.

தமிழரிடத்தும், தமிழ் மொழியிடத்தும், தமிழகத்திடத்தும் பாரதியார் கொண்டிருந்த தணியாத காதலைப் பரலி சு. நெல்லையப்பருக்கு பாரதியார் எழுதியுள்ள கடிதம் ஒன்று மிகத் தெளிவாக உணர்த்துகிறது. கடிதத்தின் முக்கிய பகுதியை மட்டும் பார்ப்போம்:

''தமிழ். தமிழ், தமிழ்—என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால் புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை. புதிய புதிய இன்பம் தமிழில் ஏறிக் கொண்டே போக வேண்டும்.

* * *

தம்பி—நான் ஏது செய்வேனடா! தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்த முண்டாகிறது.

தமிழனை விட மற்றொரு ஜாதியான் அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு சம்மதமில்லை.

தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது.

தம்பி—தமிழ் நாடு வாழ்க என்றெழுது.

தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது.

தமிழ் நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.

தமிழ் நாட்டில் ஒரே ஜாதி தான் உண்டு—அதன் பெயர் தான் தமிழ் ஜாதி.

—சாமி. பழனியப்பன்.

# சமுதாயத்தின் முன்னோடி!

[ரா. சு. கி.]

கால வெள்ளத்தாலும் அசைக்க முடியாத கருங்கல் பாறைகள் போல நிலைத்து நிற்கக் கூடியவர்கள் கவிஞர், அறிஞர், சிந்தனையாளர் முதலியோர். சமுதாயத்திலே எழுகின்ற சில்லறைச் சாடுதல்களினால்,குழப்பங்களால் சூறைகளால் பாதிக்கப்படாமல், தங்கள் தகுதியால் தனித்து நின்று, சமூகத்துக்கு நல்வழி காட்டும் அறிவுப் பெருஞ்சுடர்கள் அவர்கள்.

நாட்டு மக்கள் மண்ணோடு மண்ணாகத் தாழ்ந்து விடுகிறபோது, சுயநலமும் சிறு மதியும் குள்ளமனக் காரிருளும் சமுதாயத்தின் மீது கவிந்து தொங்குகிறபோது, மனிதர்கள் மனிதத் தன்மையை மறந்து செய்வது இன்னது எனத்தெரியாது குழம்பித் தவிக்கிறபோது, வழிகாட்டிகளாக வந்து வாய்க்கிறார்கள் கவிஞர், அறிஞர், சிந்தனையாளர் முதலியோர்.

அவர்களைச் சுற்றி உள்ளவர்கள் அவர்களை மதிக்காமல் போகலாம். அவர்கள் காலத்தவர்கள் அவர்களுக்கு உரிய புகழை அளிக்கக் கூசிக் கிடக்கலாம். எவர் நலத்தையே கருத்தில் கொண்டு, சொல்லாலும் செயலாலும் சிந்தனையாலும் அவர்கள் பாடுபடுகிறார்களோ அந்த மனிதவர்க்கத்தினரே அவர்களுக்கு பழிப்பையும் பரிகாசத்தையும் பரிசுகளாக வழங்கக் கூடும்.

என்றாலும், தமக்குச் சரி என்று பட்டதை, உண்மை — நேர்மை—மனித மாண்பு என்று தங்கள் சிந்தனை காட்டுகிறவற்றை தயங்காமல் பிறருக்கு எடுத்துச் சொல்கிறவர்கள் இந்த ரக லட்சியவாதிகள். அவர்கள் தொடுகிற சொற்களிலே தங்கத்தைத் தேக்கி விடுகிறார்கள்; பிறர் தொடமுடியாத உயர்ந்த எண்ணங்களிலே வைரத்தின் ஒளியைப் பாய்ச்சி விடுகிறார்கள். எல்லாவற்றிலும் நம்பிக்கையின் கதிர்களைத் திரட்டி வைக்கிறார்கள். விழிப்பையும், உணர்வையும், புது உயிர்ப்பையும் புகுத்துகிறார்கள்.

காலம் அவர்களுக்கு அமரத்தன்மை அளிக்கிறது. பிறகு மனிதர்கள் தலைவணங்கி கௌரவம் கொடுக்கத் துணிகிறார்கள். அவர்களுடைய எண்ணங்களை கௌரவிக்க விரும்பாமல், பக்தி பண்ணி பூசனைகள் செய்ய முந்துகிறவர் தொகைக்கும் குறைவிராது.

தனது காலத்திலே தகுந்த கவனிப்பைப் பெறாமல் போனாலும், தனக்குச் சரி என்று பட்ட கருத்துக்களை — தமிழர் சமுதாயத்துக்கு நல்லவை, நாட்டின் முன்னேற்றத்துக்குத் தேவையானவை என்று தான் தேர்ந்த எண்ணங்களை — ஒளிவு மறைவு இல்லாமல் துணிச்சலாக எடுத்துச் சொன்ன சிந்தனையாளர்களின் வரிசையிலே கவி சுப்பிரமணிய பாரதிக்கும் முக்கிய

சுப்பிரமணிய பாரதி நல்ல கவி; நாட்டின் இருளகற்ற வந்த அறிவொளி; மக்களிடையே மல்கிக் கிடந்த சிறுமைகளை ஆவேசமாகச்சாடிய உணர்ச்சிக் கனல்; நாட்டுப்பற்றை வான மதிற எடுத்து முழக்கிய வீர முரசு; ஏழை எளியவர்களின் அடிமைகள் அபலைகளின் — ஒடுக்கப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் முதலியோரின் உரிமைக் குரலை நாவலிக்க முன்வந்த எக்காளம்; பெண்களுக்காகப் பரிந்து பேசத் துணிந்த புதுமைக் குரல்; பழமைக் கலாசாரத்தின் பாதுகாப்புக்காக வாழ்ந்த ஜீவ நாதம்; இன்றையச் சமுதாயத்துக்கு உபதேசித்த வழிகாட்டி; வருங்கால நலனுக்காகத் திட்டங்கள் தீட்டிய முன்னோடி.

பாரதியை நல்ல கவிஞர் என நாடறியும். மொழியின் மறுமலர்ச்சிக்கு முதல் ஏர் ஓட்டியவன் என ஏடுகள் கூறும். கால வேகத்திலே காவியமும் வசன இலக்கியமும் எளிமையையும் தெளிவையும் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தன. அவற்றைப் பயன்படுத்தி குறிப்பிடத் தகுந்த அரிய பணி புரிந்துள்ள பெருமை பாரதிக்கு உண்டு.

பாரதியே ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்: "காலம் மாற மாற, பாஷை மாறிக் கொண்டு போகிறது; பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்க வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமைகொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை."

"எனவே, கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டும்" என்று ஏற்றுக்கொண்ட பாரதியின் 'உள்ளத்திலே உண்மை ஒளி' நிறைந்திருந்தது. அதனால் அவருடைய வாக்குகளும் ஒளி பெற்று மிளிர்கின்றன.

கவிதைகள் மூலம் உயரிய எண்ணங்களைப் பரப்பிய பாரதி கட்டுரைகள் மூலமும் உண்மைகளை அழுத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். வேதங்களைப் பற்றியும் தெய்வங்களைப் பற்றியும் பாரத கலாசாரம் பற்றியும் ஆர்வத்தோடு, உற்சாகமாகப் பேசியிருந்தபோதிலும், கடவுள் பெயரைச் சொல்லித் தாம் வாழத் துணிகிற பூசாரிகளைக் குறித்தும், பண்பாட்டை இழந்து விட்டுப் பிறப்பினால் பெருமை பேச முன்வரும் பிராமணர்களைக் குறித்தும், கலாசாலைப் படிப்பும் பட்டமும் பெற்று விட்டாலும்கூட அறிவிலே தெளிவு பெறாத பெரியமனிதர்களைக் குறித்தும் ஆத்திரத்தோடு எழுதியிருக்கிறார் பாரதி. குறைகளைச் சுட்டிக்காட்டிச் சொல் சாட்டை கொடுத்திருக்கிறார். மூடபக்தியை வன்மையாகக் கண்டித்திருக்கிறார். பயத்தையும் கோழைத்தனத்தையும் விரட்டுவதற்காகச் சரியான சூடு கொடுக்கிறார். போலிக் கருத்துக்களையும் பொய்மை வாசங்களையும் பொசுக்கிவிட்டு, மனித வாழ்க்கையை மாண்புடையதாகமாற்றப்பாடுபட்டிருக்கிறார் பாரதி. அவருடைய உயரிய எண்ணங்கள் சீரிய சிந்தனைகள் எல்லாம் பாரதியின் 'கட்டுரைகள்' தொகுதியில் நிறைந்து கிடக்கின்றன.

பாரதி பூசாரிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதைக் கவனியுங்கள்.

"கும்பிடுவோர் நித்திய அடிமைகளாகவும், தெய்வாம்சம் உடையோர் தாமாகவும் இருந்தால் நல்லதென்று பூசாரி யோசனை பண்ணுகிறான். பிறரை அடிமை நிலையில் வைக்க விரும்புவோரிடம் தெய்வாம்சம் ஏற்படாது.

அப்படியிருக்கப் பல பூசாரிகள் தம்மிடம் தெய்வாம்சம் இருப்பது போல நடித்து ஜனங்களை வஞ்சனை செய்து பணம் பிடுங்குகிறார்கள்.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள். எத்தனை காலம் ஒரு மோசக்கார மனிதனை மூடி வைத்து அவனிடம் தெய்வம் காட்ட முடியும்? ஆகையால் இந்தப் பூசாரிகளுடைய சாயம் சீக்கிரம் வெளுத்துப் போகிறது. ஜனங்கள் பூசாரிகளை அவமதிப்பாக நடத்தி பழைய மாமூலை உத்தேசித்து கல்லை மாத்திரம் கும்பிடுகிறார்கள். அப்படிப்பட்டகல் வரம்கொடுக்கவே கொடுக்காது.

பாரதி மனிதப் பண்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். மனிதனே தேவனாக உயர்கிறான். என்று அவர் குறிப்பிடுவது போற்றுதலுக்குரியது. இதோ அவ்வரிகள்—

கோயிலுக்குப் போனாலும் சரி; போகாவிட்டாலும் சரி; தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி; பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால் தெய்வம் அருள் புரியும். துளி கூட ஒரு அணுக்கூட, மற்றவர்களை ஏமாற்றுவதே கிடையாதென்று ஒருவன் பரிபூரண சித்தி அடைவானாகில் அவனே ஈசுவரன்."

மூடபக்தியையும், இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களுக்குப் போய் தேறினவர்கள் 'சுதந்திரம் ஆண்மை, நேர்மை, உண்மை, வீரியம்' முதலியவைகளைக் கற்றுக் கொள்ளாமல் சமூகத்தைக் குட்டிச்சுவராக அடித்து வருவதையும் தீவிரமாக கண்டிருக்கிறார் பாரதி.

அவர் சொல்கிறார்: "துணிவுள்ளவனையே அறிவுள்ளவனென்பதாக நமது முன்னோர்கள் மதிக்கிறார்கள். எடுத்ததற்கெல்லாம் அஞ்சும் இயல்புடைய கோழையொருவன் தன்னைப் பல சாஸ்திரங்கள் கற்றவன் என்றும் அறிவாளி என்றும் சொல்வானாயினால், அவனை நம்பாதே. அவன் முகத்தை நோக்கிக் காறியுமிழ்ந்து விட்டு, அவனிடம் பின் வருமாறு சொல்:— 'அப்பா, நீ ஏட்டைத் துளைக்கும் ராமபாண பூச்சியைப் போல், பல நூல்களைத் துளைத்துப் பார்த்து ஒருவேளை வாழ்நாளை வீணாக்கி யிருக்கக் கூடும். ஆனால் அச்சம், இருக்கும் வரை நீ அறிவாளியாகமாட்டாய்'...ஆம் அச்சமே மடமை. அச்சமில்லாமையே அறிவு."

மனிதனை மனிதன் ஏமாற்று வதும், மனிதனைக் கண்டு மனி தன் அஞ்சுவதும் அறிவுடை அல்ல; அது வாழும் வழியு அல்ல. மக்கள் அன்பு உள்ள தினராக வாழ வேண்டும். அன் செய்க! இதுதான் பாரதி மதம்

பாரதி உணர்ச்சியோடு கூ கிறார்.

"அடா, மனிதர்களே; எத் தனையோ சாஸ்திரங்களுக்கும் ஆக்கினைகளுக்கும், கட்டுப்பா களுக்கும் நம் மனிதர் உட்ப டிருக்கவில்லையா? ஒரு புதுக் க டுப்பாடு செய்து கொள்வோம் அந்தக் கட்டுப்பாடு யாதெனில் 'ஒருவருக்கொருவர்மனத்தாலு தீங்கு நினைப்பதில்லை. ஒருவரு கொருவர் பயப்படவில்லை.'மான டரே, இந்த விரதம் எடுத்து கொள்ளுங்கள். இது பிழைக்கு வழி. தெருவில் நடக்கு போதே முன் பின் தெரியா மனிதர் கூட ஒருவர்க் கொ வர் கோபம் அல்லது அவமதி அல்லது பயத்தோடு பார்த் கொள்கிறார்கள். மனிதனுக் மனிதன் இயற்கையில் வி தம் என்ற நிலையில் உங் டைய மூடத்தனமான, மனு நாகரிகம் வந்து சேர்ந்து இ கிறது. இதை மாற்றி, அன் மூலாதாரமாக்க வேண்டும்."

பாரதியின் உள்ளம் அவ கட்டுரைகளில் நன்கு தொ கின்றது. பாரதியின் இதய யைப் புரிந்து கொள்ள வி கிறவர்கள் அவருடைய கவி களை மாத்திரம் படித்த போதாது. தத்துவம், மாதர், கள், சமூகம் என்ற பிரிவுக அவர் எழுதியுள்ள கட்டுரை யும் படித்தாக வேண்டும். பொழுதுதான் சிந்தனையா பாரதியின் எண்ணங்களி ஒளிரும் வஜ்ஜிரத்தன்மை நன் புரியும்.

# சரித்திரக் காட்சிகள்

**சங்ககாலச் சோழர்.**

சோழ அரசரின் முன்னோராகப் புராண மரபு பல கற்பனை மன்னர்களின் கதை வளர்த்துள்ளது. பறக்கும் கோட்டைகள் மூன்றை வென்ற தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன், ஆன்கன்றுக்காகத் தன் மகனைப் பலியிட்ட மனுச்சோழன் புறுவுக்காகத் தன்னைப் பலியிட்ட சிபிச் சோழன் ஆகியவர்கள் கதை பழமை வாய்ந்தது. ஆனால் இவை வரலாறு என்று கூறுவதற்கில்லை.

சோழருள் காலத்தால் மிக மூற்பட்டவன் **முடித் தலைக் கொப்பெருநற் கிள்ளி.** இவனுக்குப்பின் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் **முதலாம் கரிகாலனும்** உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியும் இரண்டாம் கரிகாலனை **காரிகற் பெருவளத்தானும்** ஆண்டனர்: கரிகாற்பெருவளத்தான் புதல்வியான நற்சோணை அல்லது மணக் கிள்ளியே சேரன் செங்குட்டுவனின் தாய்.

வேற்ப ஃறடக்கைப் பெருவிறற் கிள்ளி குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்ற சேர அரசனுடன் போரிட்டு மடிந்தான் ஆனால் அடுத்த அரசன் முதலாம் கரிகாலன் வெண்ணிப் போரில் அச்சேரனை வென்றான். போரில் புறப் புண் பட்டதனால் சேரன் வடக்கிருந்துமாண்ட உருக்கமான காட்சியைக் கழாத் தலையார் என்ற புலவர் (புறம் 65) தீட்டிக் காட்டியுள்ளார், வெண்ணிப் போரை மாமூலனார் (அகம் 55), நக்கீரர் (அகம் 14 (, பரணர் (அகம் 125, 246. 376) கருங்குழலாதனார் (புறம் 7, 224) ஆகிய புலவர்கள் பாடியுள்ளனர்.

**உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி** முதலாம் கரிகாலன் மகன். இரண்டாம் கரிகாலன் தந்தை.

காவிரிக்குக் கரை கட்டியவன் என்றும், இமயத்தில் சோழர் கொடிகளாகிய புலியைப் பொறித்தவன் என்றும் காடாயிருந்த தொண்டைநாட்டின் பெரும் பகுதியை நாடாக்கி வேளாளரைக் குடியேற்றியவன் என்றும் தென்னாட்டு வரலாற்றில் பெரும் புகழ் பெற்ற அரசன் இரண்டாம் கரிகாலனே. இதன் காலம் கி. பி. 50 முதல் 90 வரை எனலாம். பன்னூறாண்டுகளுக்குப் பின்னும் மைசூர், இராயலசீமாப் பகுதிகளிலுள்ள சிற்றரசர் அவன் புகழ் மரபைத் தம் கல் வெட்டுக்களில் பாராட்டிப் பேசுகின்றனர். காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்ட பல நாட்டு மன்னர், தாம் கரிகாலன் மரபினர் என்பதிலும், தம் முன்னோர் கரிகாலனுக்காகக் காவிரிக்குக் கரை கட்டியவர் என்பதிலும் அடையும் பெருமை வியப்புக்குரியதே யாகும்! அது மட்டுமன்று. இன்னும் கரிகாலன் செய்தசெயல்களைத் தெலுங்கு நாட்டு மக்கள் பாராட்டுகின்றனர். கல்வெட்டுக்களால் அவற்றின் உண்மையறிந்த அறிஞர் ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டு கடந்த கரிகாலன் இறவாப் புகழ்கண்டு மலைக்கின்றனர்!

கரிகாற் பெருவளத்தான் தலைநகரை உறையூரிலிருந்து காவிரிப்பூம் பட்டினம் அல்லது புகாருக்கு மாற்றினதாக அறிகிறோம். கடியலூர் உருத்திரங்கண்ணனார் இவனைப் பட்டினப்பாலையாலும் முடத்தாமக் கண்ணியார் பொருநராற்றுப் படையாலும் பாடினர். முந்திய நூலுக்காக அரசன் புலவருக்கு 16 நூறுயிரம் பொன் பரிசளித்ததாகக் கலிங்கத்துப் பரணி குறிக்கிறது.

கரி காலனைப்பற்றி எழுந்த புராணக் கதைகள் பல. இவை இரண்டு கரி காலரையும் ஒன்றாக்கி விட்டன.

இரண்டாம் கரிகாலனின் புதல்வி நற்சோணை அல்லது மணக்கிள்ளி சேரன் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் மனைவியாதலால், சேரன் செங்குட்டுவன் தாய் ஆவாள்.

கரிகாலனுக்குப்பின் அவன் புதல்வர் நெடுமுடிக்கிள்ளியும் சேட்சென்னி நலங்கிள்ளியும் அரசுரிமைக்காகப் போராடினர். சேட்சென்னி உட்பட ஒன்பது சோழ இளவரசரைச் சேரன்செங்குட்டவன் நேரிவாயில் போரில் முறியடித்து நெடுமுடிக் கிள்ளியை முடி சூட்டினான். ஆனால் காரியாற்றுப் போரில் அவன் மாண்டதால், நலங்கிள்ளியே மீண்டும் அரசனானான்.

**நெடுமுடிக்கிள்ளி அல்லது கிள்ளிவளவன்** காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப் பட்டதை மணிமேகலை குறிப்பிடுகின்றது. பீலிவளை என்ற நாகக்கன்னிகை மூலம் அவனுக்கு இளந்திரையன் என்ற புதல்வன் இருந்தான். கிள்ளிவளவனால் அவன் காஞ்சியில் திரையர் கோன் அல்லது தொண்டைமானாக முடி சூட்டப் பட்டான். கரிகாலனைப் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனாரே பெரும்பாணாற்றுப் படையில் இளந்திரையனைப் பாடியுள்ளார். நக்கீரரும் (அகம் 340) காட்டூர்க்கிழார் மகனார் கண்ணனாரும் (அகம் 85) வேங்கட மலையில் கண்ட மற்றொரு திரையனை பாடியுள்ளார். திரையன், இளந்திரையன் என்ற பெயரொற்றுமையைப்பார்க்க, பீலிவளை திரையர் குடிநங்கையே என்று எண்ண இடமுண்டு.

சங்கப் பாடல்களால் **கோப்பெருஞ் சோழன், இராசசூயம் வேட்டை பெருநற் கிள்ளி. கோச்செங்கணான்** ஆகிய சோழர்களைப் பற்றிப் பல செய்திகள் அறிகிறோம். ஆனால் இவர்களைக் காலவரிசைப் படுத்த முடியவில்லை. இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி அவ்வையார் காலத்தவன். கோச்செங்கணான் சிவபெருமானுக்கு எழுபது கோயில்களைக் கட்டியதாகத் திருமங்கையாழ்வார் குறிக்கிறார்.

[இது, பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை அவர்களால் எழுதப்பட்டு, தற்போது அச்சாகிக் கொண்டிருக்கும் **'தென்னாடு'** என்ற நூலிலிருந்துஎடுக்கப்பட்டது இதனை வெளியிடுவோர், **மலர் நிலையம், பிராட்வே, சென்னை. 1.**]

## பாரதியே!

பாரதியே ! பைந்தமிழின் கவிதைச் செல்வா !
பழமையெனும் இருட்கிழித்து முன்கொணர்ந்த
சாரதியே ! கனவலையில் மறைந்திருந்து
சஞ்சலித்த தமிழரிடை விழிப்பைத் தந்த
தாரகையே ! தண்மணமும் தண்ஒளிக்கால்
தழுவஎமை உள்ளுணர்வில் தணல்நிரப்பி
'' காரிருளும் கரைந்ததுகாண் கண்மலர்க
கட்டுண்ட அடிமையினி ஆகா தேனும்
பேரார்வக் கனவெங்கே '' என்றே பாட்டின்
பிரளயத்தில் புதுப்பாதை வகுத்தாய் நீயே !

துயரமகள் பெற்றெடுத்த இன்பப் பாட்டே !
துள்ளிவரும் வைரமணி அருவிக் கூத்தில்
பயில்கின்ற வேய்ங்குழலே ! தமிழர் வாழ்வின்
பயிர் செழிக்க காலத்தால் பொழிந்த வானே !
செயலின்றி சீரின்றி உரிமை இன்றி
செத்தபிணக் காடெனவே இருந்த நாட்டில்
அயர்வோட்டும் செழுஞ்சுடராய், வான்மழையாய்
அகம் புளகும் ' தென்ற 'லென கவிதைத் தேனில்
துயர் நீக்கி உணர்வூட்டி புதுமணப்பெண்
துயிற்கனவின் எதிரொளியாய் வந்தாய் நீயே

—த. கோவேந்தன்.

# பாரதியின் கொள்கைக் குழப்பம் ஏன்?...

பாரதிதாசன், புரட்சிக்காரர்; சீர்திருத்தச் செம்மல். அவரது கவிதைகளிலே அந்தக் கருத்துக்கள் மிளிரும். நாமக்கல்லார் தேசியக்கவி; அவரது 'சாதாரணக் கவிதை'களில் அது புலனாகும். தேசிகவிநாயகம் ஆத்திகர். அவரது கவிதைகள் அதைக் கூறும். ஆனால் பாரதி? ஆத்திகரா, நாத்திகரா? முடிவு காண முடியாத புதிராக இருக்கிறது, சிலருக்கு. ஆனால் உண்மை ஒன்று. அவர் ஆத்திகராக வாழ்ந்தார்: நாத்திகராகச் செத்தார்-அதுதான் உண்மை.

ஒரு இடத்தில் பாரதி, அல்லாவை அழைக்கிறார்; அடுத்து பராசக்தியை அழைக்கிறார்; "முருகா வருவாய் மயில் மீதினிலே!" என்கிறார். 'கண்ணன் என் காதலன்' என்கிறார்—கடைசியில் "ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்!" என்கிறார். தன்னைத் தானே திட்டிக்கொள்கிறார்!

ஓரிடத்தில் இது ஆரிய நாடு என்கிறார்; "ஆரிய நாட்டினர் ஆண்மையொடியற்றும் சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக! என்கிறார்" ஆரியராணியின் வில்" என்கிறார். கடைசியில் "பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே!" என்கிறார்; "தமிழிசையைக் கெடுத்தது சமஸ்கிருதமும் தியாகய்யர் கீர்த்தனையும்தான்!" என்கிறார்.

இப்படி, பாரதி, பெரிய குழப்பத்தை நமக்குத் தந்து விட்டுப் போயிருக்கிறார். ஆனால் தெளிவு காணும் போது, பாரதி முதலில் ஆத்திகனாகவும், இடையிடையே சீர்திருத்த வெளிச்சம் கண்டவனாகவும் கடைசியில் சீர்திருத்த வீரனாகவும் வாழ்ந்து செத்திருக்கிறார் என்றே தோன்றுகிறது. பாரதி ஒவ்வொரு கவிதைகளையும் எவ்வெப்பொழுது எழுதினார் என்கிற விபரம் நமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் அதை ஆதார பூர்வமாகவே உறுதியாகக் கூறிவிட முடியும். ஆனால் கவிதைமுறை கொண்டு ஊகிக்கும் போது பின்னாளில் அவர் சீர்திருத்தவாதியாக இருந்திருக்கிறார் என்றே தெரிகிறது. இன்று பாரதி இருந்தால் முழு நாத்திகனாகவும் இருந்திருக்கவும் இயலும்!

* * * *

அப்படி இல்லா விட்டால்? பாரதி குழப்பமாகத் தோன்றக் காரணம் என்ன!

பாரதி, உணர்ச்சி வந்த போதெல்லாம் பாடினார்; எப்பெப்பொழுது எப்படியெப்படி மனநிலை இருந்ததோ, அப்படி யெல்லாம் பாடினார்; மனத்தை ஒரு சரியான கொள்கைக்குள் உறுதியாகக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்ள விரும்பாமல், நினைத்ததெல்லாம் பாடினார்—என்ற முடிவுக்கு வரலாம். அந்த முடிவிலும் எந்தக் கொள்கைகளை அவர் உறுதியாகக் கூறினார் என்று பார்த்தால், சீர்திருத்தக் கருத்துக்களையே அழுத்தமாகக் கூறியிருக்கிறார்.

பக்தியைப்பற்றிப் பாடும் போதும் முருகனை அழைக்கும் போதும் அவருக்கு இருந்திருக்கிற மனநிலை, சீர்திருத்தம் பாடும்போது அழுத்தமாக இருந்திருக்கிறது. "பேராசைக்காரன்டா பார்ப்பான்"—இதில் "அடா!" இருக்கிறதே, அது, பார்ப்பான் பேராசைக் காரன்தான் என்ற முடிவைக் கூறிவிடுகிறது! "ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்!' என்னும்போது **"அறிவிலிகாள்"** என்கிற வார்த்தை இருக்கிறதே, அது, மடமையைக் கடைப்பிடிப்பவனை மண்டையிலடித்து, "அட **முட்டாளே!** தெய்வம் ஒன்று தானடா!" என்று கூறுகிறது. உறுதியோடு தொனிக்கிறது.

"மாடனைக் காடனை வேடனைப் போற்றி மயங்கும் **மதியிலிகாள்!"** என்கிறார். வசையே பாடுகிறார்! **"அறிவில்லாதவனே! புத்தியில்லாதவனே!"** என்கிறார். மடமையைக் கண்டு "நெஞ்சு பொறுக்குதில்லையே!.. என்கிறார் "இந்தக் குளத்திலே அந்த இடத்திலே இருந்தது முரட்டுப் பேய், பூதம், பிசாசு!" என்பவரைப் பற்றிக் கவலைப் படுகிறார்!

பக்திக் கருத்துக்களைக் காட்டிலும் சீர்திருத்தக் கருத்துக்களை ஆர்வத்தோடு கூறுகிறார். இன்னொன்று அவர் வாழ்ந்த சூழ்நிலை, அவர் முழுச் சீர்திருத்த வாதியாக மாற முடியாமல் வளைத்தே வைத்திருந்திருக்கலாம் என்பது நிச்சயமான உண்மை; **அந்தக் காலத்திற்கேற்ப, பாரதி வாழ்ந்திருக்கிறான்; அந்த மனப் பான்மையை தன்னையறியாமல் பின் பற்றியிருக்கிறான். ஆனால் சீர்திருத்த எண்ணத்தையும் திடமாக வெளியிட்டிருக்கிறார். அவருடைய உண்மையான இதயம் சீர்திருத்த இதயம். கொள்கைக் குழப்பம் அவர் தவிர்க்கமுடியாத ஒன்றாக இருந்திருக்கிறது.**

—கண்ணதாசன்


**கோவை நீலகிரிக்கு**

மதராஸ் பிக்சர்ஸின்

**செந்தாமரை**

கே. ஆர். ராமசாமி

சிவாஜி கணேசன்

லலிதா—பத்மினி

கலைவாணர் என். எஸ். கே.

டி. ஏ. மதுரம்

கே. ஏ. தங்கவேலு

மற்றும் பலர் நடித்தது.

மற்றும் பல முதல்தரப் படங்களை நாங்கள் விநியோகிக்கிறோம்.

எழுதுக:

**கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிட்**

**ஜெயில்ரோட் - கோவை**

**போன்: 757**



**'தென்றல்'**

**புதிய முகவரி**

**தென்றல்**

13, நல்லண்ண முதலி சந்து

இராயப்பேட்டை

சென்னை-14.

# ஐயோ! மறைக்கப்பட்டார்!

"மகாகவி பாரதியாரின் மூச்சு-புதிய உலகம்! பேராசைக் காரனடா பார்ப்பான் இது அவர் வாக்கு! மேடைகளில் கேட்ட துண்டா? கோடையிடி என முழக்க மிட்டோர் கூறிய துண்டா? சிறப்பு விழாக் கூட்டங்களில் செப்பிய துண்டா எவரேனும்!! இல்லை!! அந்த உண்மைப் பாரதி மறைக்கப் பட்டார்" அறிஞர் அண்ணு அவர்கள் கூறிய மணிவரிகள் மேலே தந்திருப்பவை!! சுப்பிரமணிய பாரதியா!—மறைக் கப்பட்ட மகாகவிஞரா? ஆம்! முழு உண்மை!! அதுவும் தேசிய முகாமின் முன் வரிசையில் நின்றவர்களாலேயே மறைக்கப்பட்டார் அந்தப் பாவலர் என்பதன் திரை நீக்க மாக அமையும் இந்த கட்டுரை எனக் கருதுகிறேன்:

1919—ம் ஆண்டு! படித்த நினைவுதான்? இந்திய உப கண்டத்தின் தந்தை என்று தியாகம் சிந்திகளால் போற்றப்பட்ட அண்ணல் காந்தியார் சென்னைக்கு வந்த பொழுது ஆச்சாரியாரின் மாளிகையில் தங்கி யிருந்தார். திண்டு மெத்தைகளில் சாய்ந்தபடி தான் அண்ணல் அமர்வது வழக்கம்!! அன்றும்—மகாதேவ் தேசாய் காந்தியார் சொல்வரிகளை எழுத்தாக்கிக் கொண்டிருக்க-ரங்கசாமி அய்யர் எடுபிடியில் ஈடுபட்டிருக்க — சத்திய மூர்த்தியவர்கள் பழச்சாறு தயாரிக்க—ஆச்சாரியார் புன் முறுவலுடன் எதிர் நிற்க—எழுத்தாளர் வ. ரா. வாயில் காத்துநிற்க — காந்தியடிகள் வீற்றிருந்தார்!!

வாயில் காப்பாளர் வ. ரா. விற்கோ–யாரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாது என்று ஆச்சாரியார் உத்திரவு பிறப்பித்திருந்தார். அதுசமயம் அடலேறென நடைபோட்டு வந்தார் ஒருவர்! ஏன் வா. ரா. இங்கு நிற்கிறீர்கள் என்று சிம்மக்குரலில் கேட்டபடியே! வந்தவரோ வாயில் காப்பவருக்கு மிகமிகவேண்டிய நண்பர்! மதிப்பிற்குரிய அன்பர்! என்ன செய்வார் பாவம் வ. ரா. திருதிரு வென விழித்தார்; வந்தவர் புரிந்துகொண்டாரோ என்னவோ–வாயில் காப்பவரின் நிலையை! நேராக மாளிகைக்குள் நுழைந்து வேகமாக நடந்தார். வாயில் காத்த வ. ராவும் பின் தொடர்ந்தார். சென்றவர் காந்தியாரை நெருங்கியதும் கரம்குவித்தார். பதிலுக்கு அண்ணலும் அஞ்சலி செய்தார்' உடனே காந்தியார் அமர்ந்திருந்த திண்டில் இவரும் சாய்ந்தபடியே உட்கார்ந்தார்.

"செய்தி என்ன" என்ருர் காந்தியார், வந்த புதிய மனிதரைப்பார்த்து;

"மிஸ்டர்—காந்தி இன்று மாலை ஒரு பெதுக்கூட்டம் தலைமை வகிக்கமுடியுமா" வந்தவர் கேட்டார் இப்படி!

"மகாதேவ். இன்று மாலை வேறு அலுவல்கள் ஏதாவது?" காரியதரிசியைப் பார்த்து காந்தியார்.

"இருக்கிறது அண்ணலே... வேறோர் இடத்தில்" காரிய தரிசியின் பதில்.

"நண்பரே! இன்றைக்கு முடியாது என்ருல்; நாளைக்கு வேண்டுமாளுல் ஒத்திப் போட்டுக் கொள்ளுங்கள்" வந்தவரைப் பார்த்து காந்தியார் சொன்னுர்!

"மன்னிக்கவும்- நாளைக்கு ஒத்திப்போட என்ருல் முடியாது; வருகிறேன். நன்றி.. உங்கள் இயக்கத்திற்கு என் ஆசிர்வாதம்!" வெடுக்கென இப்படி பதில் கூறிவிட்டு வேகமாக வெளியேறினுர் வந்தவர்!!

காந்தியார் திடுக்கிட்டுப் போனுர்!! சில வினாடிகள் செயலற்றவரானுர்! ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு "ராஜாஜி... யார் அவர்?" ஆச்சாரியாரைப் பார்த்துக் கேட்டார் காந்தியடிகள்!

"அவர்! ஒரு தமிழ் நாட்டுக் கவி!" ஆச்சாரியார் தந்த அலட்சியமான பதில்.

"அவர் ஒரு மேதை-பத்திரமாக பாதுகாக்கப்பட வேண்டியவர்" காந்தியார் வந்துபோனவரைப்பற்றி தந்த இறுதியான எண்ணம் இது! இதைக் கேட்ட ஆச்சாரியார் அப்பொழுது மௌனம் சாதித்து நின்ருர்!! நடந்த சம்பவம் இது!! அப்பொழுது வாயில் காப்பாளராக நின்ற வ. ரா. அவர்களே இந்த நெஞ்சு கொதிக்கும் சம்பவத்தை ஏடொன்றில் தீட்டியுள்ளார்!

தடை மீறி நுழைந்து-திண்டில் சரிநிகர் அமர்ந்து 'உண்டு இல்லை' என்ற முறையில் உரையாடி–சீற்றத்துடன் வெளியேறி காந்தியாரால் மேதை என்று போற்றப்பட்டவர்தான்! புரட்சிப் புலவர் பாரதியார்!

என்ன துணிவு! நெஞ்சழுத்தம் இந்த கவிஞனுக்கு!! நாற்பது கோடி மக்களின் பிதா அவர்! இந்திய நாட்டின் ஏகத் தலைவன்!! அவன்முன் சரிக்கு சரி உட்காருவதா? மண்டைக் கர்வி!! மட்டம் தட்ட வேண்டும் இவனை! கைகட்டி வாய் பொத்தி ஏவலுக்குக் காத்திருக்கிறேன் நானே! என்ருல்...! ஒரு சமான்யன் தடைமீறி நுழைவதா–பண்டிதருக்குச் சொந்தமான இடத்தில் அமர்வதா? வெட்கம்! வெட்கம்!! கூறவில்லை இப்படியெல்லாம்—என்ருலும் நிச்சயம் நினைக்காமலா இருந்திருப்பார் குல்லுகப்பட்டர்.! இல்லாவிடில் பாதுகாக்கப்பட 'வேண்டிய மேதை' என்று காந்தியார் கூறியபோது–ஊமையாகி விட்டதேன் ஆச்சாரியார்!

தேசத்தின் பிதாவால் புகழப்பட்ட அந்த கவிதை மலர் பாரதியார்! நெஞ்சழுத்தக் காரர்களால் மறைக்கப்பட்டு—வறுமைச் சூட்டால் வாடி, வசைக் காற்ருல் வதங்கினுர்! உதிர்ந்தமலரானுர்!! உரமானுர் பல கவிதை மலர்களுக்கு!!

1883-ம் ஆண்டில் கவுண்டனூர் சமஸ்தானத்தில் சின்னசாமி என்ற பார்ப்பனருக்கு மகனய் பிறந்தார்! பார்பனருக்குத்தான்! என்ருலும் மனிதராக வாழ்ந்தார்! புதுமையாளராகவிளங்கினுர்! பள்ளிப்படிப்பில் அவ்வளவாக நாட்டம் கொள்ளவில்லை கவிஞர்!! ஏதோ படித்தார் அறைகுறை மனத்துடன்: அப்பொழுதே கவிதையில் ஆர்வம் கொண்டார்: சிறுகவிதைகள் தீட்டி மகிழ்வார்: ஆசிரியர் வகுப்பில் பாடம் கற்பிக்கும் பொழுதெல்லாம்—அவரைப்பற்றிய வேடிக்கைக் குறிப்புகளை கவிதையாக்கி—பக்கத்துப் பையனிடம் நீட்டுவார். சிரிப்பில் பங்குகொள்வார்!! பள்ளிப் பருவத்தில் தொடங்கிய அந்த அரும்புச்சிரிப்பே, அவர் வாழ்நாள் முழுதும் வேதனையை சமாளிக்கும் பெருஞ்சிரிப்பாக மாறி துன்பச்சுமையை ஓரளவு குறைத்துக்கொள்ள துணை புரிந்தது. இவர் படிப்பு ஒருவாராக முடிவதற்குள்—பெற்ருேர்களின் வாழ்வும் முடிந்து விட்டது;! வயிற்றுப் புயலை அடக்கவேண்டுமல்லவா-அதற்காக வேலை தேடினுர்!' இவர் பாடிய சில பாட்டுகள் இவருக்கு ஒரு தமிழ் ஆசிரியர் வேலையை தேடித்தந்தது மதுரையில்!! கவிதா உள்ளம் படைத்தவர்கள் பொதுவாகவே சுதந்திரப்பறவைகளாகத்தான் வாழ்ந்திருக்கிருர்கள்: இயற்கையழகின் திரை நீக்கம்தானே கவிதை! கூரிய தொலை நோக்கும்–விரிந்த மனமும்–கவிஞர்களின் பொதுப் பண்பல்லவா! கவிஞர்களின் கண்களே ஒரு டெல்லஸ்கோப் தானே! பாரதியாருக்கு-பண்டிதர் வேலை ஒத்து வரவில்லை! அந்த சமயத்தில் 'சுதேசமித்திரன்' பத்திரிக்கை நடத்திவந்த சுப்பிரமணிய ஐயருக்கும்பாரதியாருக்கும் தொடர்பு ஏற்பட்டது. கவிஞரின் உள்ளம் அறிந்த

---

**மூத்தோர் மொழி!**

கவிதை என்பது, வெறும் மனக்கற்பனையிலே மலர்வதல்ல; சூழ்நிலையின் இயற்கை எழிலால் தூண்டப்பட்டுப் பொங்கி வழிவது.

— ராகுலசாங்கிருத்தியாயன்.

நடிகளுக்கு முக அழகு பிரதானம்; வெறும் பாட்டையும் பேச்சையும் கேட்டு ரசிக்க மட்டும் மனிதன் விரும்புவதில்லை. அழகான முகங்களைக் காணவும் விரும்புகிருன்.

—அலக்சாண்டர் டூமாஸ்.

கவிஞன் எந்த நிகழ்ச்சியையும் பொருளையும் அன்புக் கண் கொண்டுதான் பார்க்கிருன். அன்பு உள்ளத்தோடு பார்க்கும் போது, பிறர் பயனற்றதென்று கருதும் பொருள்களிலே கூட அவன் உலகம் போற்றும் சீரிய கருத்துக்களைக் காண்கிருன்.

—அறிவுத்திரள்.

பிழையை எடுத்துக் காட்டாமல் விடுவது, அறிவுத் துறையில் ஒழுக்கமின்மையை ஆதரிப்பதாகும்.

—காரல் மார்க்ஸ்

தன்னைச் சுற்றித் தீமையே நிறைந்திருக்கும் போது, ஒருவன் நன்மையைக் கடைப்பிடித்தால் அதில் சிக்கி மாய வேண்டியது தான்.

—மாக்கியவல்லி.

அவர் 'சுதேசமித்திரன் அலுவலகத்திலேயே பணியாற்ற பாரதியாரை சென்னைக்கு அழைத்துச் சென்றார்: சில காலம் பணியாற்றினர்: ஆனல் அங்கு அவர் வலக்கரத்திற்கு கடிவாளம் பூட்டப்பட்டது. தலையங்கமா? காரசாரமாக இருக்கக்கூடாது! கவிதையா? கனலும் அனலும்—தெறிக்கக் கூடாது!! : கட்டுரையா? எவர் மனதையும் புண்ணுக்கும் வேலாக இருக்கக்கூடாது! சிறு கதையா? சமுதாயக் கோணல்களின் படப்பிடிப்பாக அமையக்கூடாது? இத்தனை தடைகள்! ஒத்து வருமா; அந்த உணர்ச்சிக் கவிஞருக்கு!! என்ன செய்வார்! 'பெரிதினும் பெரிது கேள்'' என்ற கொள்கையுடையவராயிற்றே! ஆசிரியரோ மிதவாதி! கவிஞரோ தீவிரவாதி!! மாறுபட்டார்—வேறுபட்டாராகு முன்—பக்குவமாக விலகிக்கொண்டார்: பொங்கிடும் கவிதாஊற்று! அலை மோதும் விடுதலை வேட்கை கவிஞரை 'இந்தியா' என்ற வார ஏடு ஒன்றை துவக்கச் செய்தது!! தீந்தமிழ் கவிதைகளை ஆக்கி தென்றல் நடையில் வெளியிட்டார்!! "பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை போகவோ? நாங்கள் சாகவோ? அழுது கொண்டிருப்போமோ? ஆண்களல்லவோ? உயிர் என்ன வெல்லமோ? இப்படி எழுதினல் நம் காங்கிரஸ் அரசாங்கமே தடை போட்டுவிடும் என்ருல்! வெள்ளையர் ஆட்சியில் கேட்க வேண்டுமா?

ஆட்சியாளர்களின் உருட்டு விழி இவரை நோக்கவே—இலக்கியப்பணிக்கு இடையூறு ஏற்படும் என உணர்ந்த பாரதியார் புதுச்சேரிக்கு குடிபோனர்.

"சூத்திரர்க்கு ஓர்நிதி—தண்டச்சோறுண்ணும் பார்ப்புக்கு வேருேர் நீதியா?''

"துன்பமே இயற்கை எனும் சொல்லை மறந்திடுவோம்''

"ஆயிரம் தெய்வம் தேடும் அறிவிலிகளே''

"மோதி மிதித்துவிடு! அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு!''

"இந்நாட்டில் கொஞ்சமோ பிரிவினைகள்; ஒரு கோடி என்ருல் அது பெரிதாமோ''

"காக்கை குருவி, எங்கள் குலம் நோக்க நோக்ககளியாட்டம்''

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் மகிமை இல்லை''

"பார்ப்பானை ஐயன் என்ற காலமும் போச்சே;''

"பேராசைக் காரனடா பார்ப்பான்! நல்ல பெரிய துரை எனில் ஏய்ப்பான்!''

"சிந்தையில் கள்விரும்பி—சிவ! சிவா! என்பதுபோல் வந்தே மாதரம் என்பார் கிளியே! மனதில் அதைக் கொள்ளார்''

"ஜாதிச் சண்டைபோச்சா! சமயச் சண்டைபோச்சா!''

"நீதி சொல்லவந்த மூடா—நில்லாமல் போடா''

இந்த முறையில் நாட்டின் பல கோணங்களில் நடைபெரும் ஊழல்களை கண்ணேட்டம் பாராமல்—பச்சையாக கண்டித்தார்!! பக்தியின் பேரால்—ஆண்டவன் பேரால்—மதத்தின் பேரால்—சம்பிரதாயங்களின் பேரால் நடைபெரும் பழைமைகளைச் சாடினர்!! கயமைப் பண்புகளை—போலி நடிப்பை — ஏமாற்று மோசடிகளை கண்டித்து குரல் எழுப்பினர்: செய்யலாமா இவர்!! சகிக்குமா சமுதாயம் இதையெல்லாம்!! பார்ப்பனர் வயிற்றில் பிறந்துவிட்டா 'பேராசைக்காரனடா பார்ப்பான்'' என்று பாடுவது! கூடாது!! ஆபத்து!! இவன் வளர்ந்தால்!! ஆத்திகத்திற்கே பேராபத்து சம்பவிக்கும்!! இப்படிக் கூறினர் பலர்!! பாரதியாரின் கண்டன அம்புகள் எங்கெந்த கோட்டைகளை தாக்கிற்றே—அங்கிருந்தெல்லாம் எதிர்ப்பு முன்னணி கிளம்பிற்று!! சமுதாயத்தின் பெரிய மனிதர்களுக்கு தீராப்பகைவரானர்!! செவிகளை திட்டிக்கொண்டு செல்லரித்த சமுதாயம்! நெறித்த புருவங்களோடு புண்ணில் சரம்விடும் பூசுரக் கூட்டமும்! அகலத்திறந்த விழிகளுடன்!! போற்றுவோர் போற்றட்டும்; புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும் தொடர்ந்து சொல்வேன்; ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்ருல்! எடுத்துரைப்பேன் எவர் வரினும் நில்லேன்; அஞ்சேன்'' என்று கவிஞர் முரசரைவது போல புரட்சிப் புலவன் பாரதியும்—தன் பெரும்பயணத்தில், எதிர்ப்பையும்—ஏளனத்தையும்; கேலியையும்-ஏசலையும்—தூசென மதித்து நடந்தார் "மானம் சிறிதென்றெண்ணி வாழ்வு பெரிதென்றெண்ணும் ஈனர் குலத்தில் இருக்க நிலையில்லையே'' என்று நெஞ்சம் குமுறினர்; நெருப்பு மலையானர்'' அந்த நேரத்தில் தான் வறுமை இருள் மெள்ள மெள்ள அவரைச் சூழத் தொடங்கிற்று!! குடும்பத் தொல்லை!! என்ருலும் இலக்கியப்பணி ஓயவில்லை!! 'சென்றிடுவீர் எட்டுதிக்கும் கலைகளை வாரிவர'' என்று கட்டளையிட்டார்!!

"காதற்பெண்கள் கடைக்கண்பணியிலே காற்றிலேறி அவ்விண்ணையும் சாடுவோம்! கண் இமைபோல் காதல் இன்பத்தைக் காத்திடுவோம்—இப்படி பொழிந்து தள்ளினர் காதல் கீதங்களை: இறவாத புகழுடைய் தமிழ் நூல்களை இயற்றச் சொன்னர்!! தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்யுங்கள் என்றார்!! இவ்வளவு செயற்கறிய செய்த அந்த உயர்கவிஞருக்கு - இந்த நாடு தந்த பரிசும்! கேடர்கள் சூட்டிய புகழ்மாலைகளும்! வேதனை! வேதனை!! எது தெரியுமா?

இலக்கண அறிவில்லாதவன்!
கவிதா வரம்பு உணராதவன்!
உண்மைப் புலமை அற்றவன்!
போக்கறியாதவன்!
மரியாதை தெரியாதவன்!
அபின் வெறியன்!
ஆணவக்காரன்!
போதையில் எதையாவது
உளருபவன்!

இத்தனையும் அப்புத்துலகைக் காண விரும்பிய மக்கள் கவிஞனுக்கு இந்த மண்டலம் தந்த பரிசு!! வெகுமதி!! இவை போதாதென்று தோழர் ரா. கி. அவர்கள் "பாரதி அப்படி ஒன்றும் பெரிய கவிஞனல்ல? அவன் கவிதைகள் அனைத்தும் குற்றமுள்ளவை'' என்று தன் கெடுமதியை ஆனந்த விகடன் மூலம் வெளிப்படுத்தினராம்!! மாண்டபின் மணிமண்டபம் கட்ட கச்சையை இழுத்துவிட்டு—முதலைக் கண்ணீர் வடித்தாரே அந்த 'ரா. கி.' தான்! எப்படி இருக்கிறது மானிட இனத்தின் கேவல நடத்தை! இத்தனைச் சுமொழிகளுக்கும் — கண்டனங்களுக்கும்—அந்த பெரும் புலவன் தந்த பதில் ஒரு பெருஞ் சிரிப்புதான்!! அதுவும்; வெண்கலப்பாதையில் உருண்டால் இரும்பு சக்கரம்'' எப்படி ஒலிவருமோ—அப்படி இருக்குமாம் அவர் பெருங் குரல்! வெண்கலக் குரல்!! இடுக்கண் வருங்கால் நகுக என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணமாக அமைந்தார் பாரதி!?

'சுதேசமித்திரன்' அலுவலகத்திலிருந்து விலகிய சின்னட்களுக்குப் பிறகு பாரதியாரின் எழுத்துக்களுக்கு இடமளிக்க மறுத்தது அந்த 'பத்திரிகா தர்மம்' தவருத ஏடு! புதுச்சேரியில் ஒரு நாள் நண்பர் சிலர் "ஏன் நீங்கள் மித்திரனுக்கு எழுதுவதில்லை'' என்று பாரதியாரைக் கேட்டனராம்! அதற்கு 'மித்திரன்' பழைய பத்திரிகை! நானே புதுமனிதன்! என் எழுத்துக்களை வெளியிட்டு அது தன் புகழை குறைத்துக் கொள்ளுமா'' என்று பெருமூச்சு விட்டபடியே பதில் தந்தாராம்! என்ன பொருள் அந்த பெருமூச்சிற்கு! எரிமலையாகி விட்டதப்பா—என் நெஞ்சம்! என் செய்வேன். நண்பர்கூட நயவஞ்சகர்களாய் மாறி—என் புலமையை இருட்டறையில் தள்ளுகின்றனரே!! எழுத்துக்களை மறைக்கின்ருர்களே மாபாவிகள்! ஐயோ—நான் மறைக்கப்படுகிறேன்: என்பதாகத்தானே இருக்கமுடியும்!

கவிதை எழுத ஏடெடுப்பார்! கதவைத் தட்டுவானும் வாடகைக்காரன!

சாய்வு நாற்காலியில் விழுந்தபடியே—சிந்தனைக் கடலில் மூழ்குவாராம்—'சார்' என்ற குரல் வருமாம்— அது பலசரக்கு கடைக்காரன் குரலாக இருக்குமாம்!! என்செய்வார்! ஏழைக் கவிஞர்!! அவர் வாழ்நாள் முழுதும் இப்படி ஓயாத தொல்லை!! —ஏ. கே. வில்வம்

இந்த நாட்டிலும் சரி, அயல் நாடுகளிலும் சரி, கவிகள் பெரும் பான்மையில் கலைஞர்களாய் இருந்தார்கள். அதாவது கவிஞர்கள் அழகையோ, அவலட்சணத்தையோ, அநீதியையோ கண்டு, அதைச் சொல் சித்திரத்தில் வரைந்தார்கள். சரியாய் சொன்னல் அவர்கள் கட்சிக்காரர்களாய் இருக்கவில்லை; சாட்சிக்காரர்களாய் இருந்தார்கள் 'கவிதை உள்ளம்' என்ற சரக்கு அவர்களிடம் நிறைந்திருக்கவில்லை.

அப்படியானல் கவிதை உள்ளம் என்பது என்ன? படைப்பில் எல்லா ஜீவராசிகளோடும் அவைகளின் சலனத்தோடும் ஒட்டிக் கொள்ளுந் தன்மைக்கு 'கவிதை உள்ளம்' என்று பெயர், கலைஞன் தன்னுடைய சித்திரத்தை வரையும் பொழுது, தான் வேறு என்ற உணர்ச்சியுடன் இருக்கலாம். ஆனல் கவிஞனுக்கு அப்படிப்பட்ட நிலைமையே இருக்க முடியாது.

கவிஞன் புயலைப்பற்றி கவிதை எழுதினல், அவன் புயலோடு புயலாய் ஒட்டிக்கொண்டிருப்பான்; அன்பை வர்ணித்தால், அவன் அன்பு மயமாக ஆய்விடுவான்; அநீதியை தாக்கினல், அவன் உள்ளம் சீறி எழும்! கவிஞன் ஒரு ஆளையோ ஒரு பொருளையோ கேலி செய்தால், அது அவன் தன்னைத்தானே கேலி செய்து கொண்ட மாதிரி இருக்கும். அதாவது கவிஞனின் உள்ளம் இரண்டற கலக்கும் உள்ளமாகும். அவன் கட்சி பேச முடியுமே ஒழிய, சாட்சி சொல்ல முயடிாது. —வ. ரா.

# கட்டபொம்மன்

(முன் இதழ் தொடர்ச்சி)

## காட்சி 11

(கட்டபொம்மன் அவை:...கட்டபொம்மன் ஊமைத்துரை விகடகவி முதலியோர் வீற்றிருக்கின்றனர்; ஜாக்ஸனின் ஓலையொன்றைக் கையில் விரித்தபடி கட்டபொம்மனின் மனம்படிக்கின்றது.)

ஆள் அனுப்பியும் கடிதம் எழுதியும் கப்பத்தொகையை நீர் அனுப்பி வைக்கவில்லை. நேரில் வாரும் என்றேன்; வரவில்லை. உமது நன்மைக்காக இப்போதும் உரைக்கின்றேன் ; இம் முறையாவது பேட்டிகாண வாருமென்று......

கட்டபொம்மன் : ஜாக்ஸன்......!

ஊமைத்துரை : யார் இவன் ஜாக்ஸன்?

தானுதிபதி - மாக்ஸ் வெலின் மறுபதிப்பு......! பேட்டி காண அழைக்கிறது......!

கட்டபொம்மன் : வீரத்தையும் மானத்தையும் விலை கூறித் திரியும் வீணர்களாகத் தமிழ் நாட்டார் மாறியபிறகு வெள்ளையரை நாம்தான் பேட்டி காணவேண்டும்! பேட்டியிலே அவர்கள் செய்த அநீதிகளை எடுத்துக்காட்டிக் குற்றம் சாட்டுகின்றேன். கேட்டும் நம்மை ஆட்டிப்படைக்க வேட்டெழுவார்களேயானால் ஈட்டி முனையிலே பேட்டி காணுகின்றேன்! ஆட்டம் போட்டுத்திரியும் அந்த நாட்டு வெள்ளைக் குரங்குகளை வேட்டையாடி வெல்லுகின்றேன்! நாட்டைக் கவனித்துக் கொள்ளுங்கள் நான் புறப்படுகின்றேன்......!

தானுதிபதி : அரசே! தனித்துச் சென்றால்......

கட்டபொம்மன் : பிணைத்துப் பிடித்து விடுவார்களோ!

தானுதிபதி: பாஞ்சாலங் குறிச்சியானைப்பகைத்து வெல்ல யாரால் முடியும்?

கட்டபொம்மன் : பின்னென்ன? நகைத்துத்தான் வென்று விடுவார்களோ?

தானுதிபதி : பகைத்தோ நகைத்தோ பலங்காணவா நம்மை அழைக்கின்றனர்?

விகடன் : இல்லை......

தானுதிபதி : நம்மைப்பேட்டிகாண அழைக்கும் அவர்கள் எந்த நாட்டிற்காவது வேந்தர்களா?

விகடன் : இல்லை......இல்லை......

தானுதிபதி : அரசபரம்பரையிலாவது அவதரித்தவர்களா?

ஊமைத்துரை : அதுவுமில்லை......

தானுதிபதி : வேறு தகுதி திறமை ஏதாவது உண்டா?

விகடன் : இல்லவே இல்லை......

கட்டபொம்மன் : சூழ்ச்சியும் சுயநலமும் தலைவிரித்தாடும் போது கௌரவத்தையும் கண்ணியத்தையும் காத்துக் கொண்டிருக்கக் காலம்தான் ஏது? மன்னாதி மன்னரெல்லாம் தன்னலப்பேய்களாக மாறிய பின்னர் எம்போன்றவர்கள் இருந்து வாழத்தான் இடமேது?

நாம் பகைமை பாராட்டுவது தனிப்பட்ட வெள்ளையர் மீதல்ல தனிப்பட்டவர் மேலல்ல! ஏகாதிபத்திய வெள்ளையர் தம் வெறிப் பண்பு இருக்கிறதே, அதைத்தான் எதிர்க்கின்றோம் என்பதை அவர்கள் உணர செய்யவேண்டும்! அதற்காகவாவது பேட்டி காணத்தான் வேண்டும்.

ஊமைத்துரை : நாடாளும் வேந்தன் நாடோடிக் கூட்டத்தை பேட்டி காணச்செல்வது அவமானம்! அவமானம்!

கட்டபொம்மன் : அழைப்பிற்கிணங்கிச் செல்லல் அவமானத் தன்மை என்றால் அச்சத்தால செல்லாதிருத்தல் மானத் தன்மையோ? விந்தையான பேச்சு! செல்வேன்! தீரர்களே அஞ்சாதீர்!

ஊமைத்துரை : அண்ணா! ஆணைக்கடக்க அணுவளவும் விருப்பம் இல்லை......ஆனால்......

கட்டபொம்மன் : தம்பி! நீயா! இவ்வாறு பேசுகின்றாய்!

ஊமைத்துரை : அண்ணா! அப்படியொன்றுமில்லை. தங்கள் உடன் வரமட்டும் அனுமதி வேண்டும்!

கட்டபொம்மன் : ஆகட்டும்......!

வெள்ளையத்தேவன் : மன்னா! என் வேண்டுகோளும் ஒன்றுண்டு — அடையும் படையுடன் நடையாகவாவது நாங்களும் வர அனுமதி வேண்டும்!

விகடகவி : புவிமன்னர் நீங்கள் போகும்போது......?

கட்டபொம்மன் : கவிமன்னர் நீரும் வரலாம்!

விகடகவி : ஆமாம்! ஆமாம்! புவிமன்னர்!......... கவிமன்னர்!

கட்டபொம்மன் : அமைச்சரே: அரும்படைத்தலைவரே! நாம் இன்று தொடங்குகின்றோம்! அறப்போர்! அன்னியர் ஆட்சியை அழிக்கத் தொடங்கித் தன்னினத்தையே அழிக்கும் தறுதலையாகிவிடக்கூடாதே என்பதால்...எனவே கட்மை, கட்டுப்பாடு, கண்ணியம் இந்த மூன்றுமே நமது கவனத்திலிருக்கவேண்டும்! இந்த மூன்றும்தான் நமது படைக்கலங்கள். அமைதியான நிலையிலே அன்னியரும் போற்றும் முறையிலே அறப்போர் தொடங்குவோம்! அறப்போர் பயன்தரும் முறையில் ஆளவந்தோர் என்று கூறும் அவர்கள் நடைமுறை அமையவில்லை என்றால் மறப்போர் தொடங்குவோம்! அன்று மண்டியிட்டே தீரும் இந்த ஆளவந்த கூட்டம்.............. மமதை யாளர் கூட்டம்!

## காட்சி 12

(சாலை வழியிலே வீரர்கள் உரையாடிச் செல்கின்றனர்)

வீரன் : ஏண்டா! சோத்து மூட்டை!

சூரன் : என்னடப்பா! சொக்காய் சட்டை!

வீரன் : நமது அரசர் தனியாகப் போகிறாராமே!

சூரன் : (சிரித்தல்) பொய்யி! பொய்யி! பொய்யி! (கொண்டையனைப் பார்த்து) ஏண்டா! நீதான் சொல்லடா? நமது அரசர் படை சூழாமல் தனியாக எங்கேயாவது போவாரா? எங்கேயாவது போயிருக்கின்றாரா? அப்படித் தனியாகப் போகவேண்டிய அவசரந்தான் என்ன! (வீரனைப் பார்த்து) ஏண்டா புளுகு மூட்டை! என்னிடமே உன்னுடைய மூட்டையை அவிழ்க்கின்றாயே!

வீரன் : உண்மையைத்தான் உன்னிடம் சொன்னேன்!

சூரன் : அள்க்காதேடா கதையை......

கொண்டையன் : அளப்பதற்கு படியும் இல்லை...... மரக்காலும் இல்லை....வீரன் சொன்னதெல்லாம் உண்மை தானப்பா உண்மைதான்! அதனாலேதான் நாங்கள் எல்லோரும் கட்டபொம்மு ராசாவுக்குத் தெரியாமே அரண்மனையைச் சுற்றி காவல் காக்கப்போகின்றோம்!

வீரன் : வீரபாண்டரைக் காக்க நாம் போகாமல் வேறு யார்தான் போவதாம்!

சூரன் : அப்படிப்பா! புறப்படு! வேல் எங்கே? (காலாடியைப் பார்த்து) ஏண்டா! காலாடி! அந்த வாளை எடு!

காலாடி : நானும்தான் வருகின்றேன்! அரசரை எப்படியடா தனியே அனுப்ப முடியும். அவர் வேண்டாமென்றாலும் நாம் தெரியாமல்தான் அவர் பின்னே போகவேண்டும்.

சூரன் : வேந்தர் தனியாகப் போனால் வெள்ளை நாய்கள் கடித்தாலும் கடித்து விடுமடா! நீங்கள் வேண்டுமானால் போருக்குப் போகாமல் பொந்திலே இருங்களடா!

வீரன் : என்னடா! புரியாத்தனமா இப்படி பேசுகின்றாய்! புறம் புண்படாத பரம்பரை போருக்கு அஞ்சுமாடா? உணர்ச்சியுள்ளவன் போருக்கு போகாமே எப்படியடா உட்கார்ந்திருக்க முடியும்.

கொண்டையன் : நாம் என்ன சோத்து மூட்டைகளா! இல்லை சொக்காய் சட்டைகளா? பொந்திலே ஒளிந்து கொண்டிருக்க......

காலாடி : புறப்படுங்கள் எல்லோரும் போருக்கு வீரபாண்டியக் கட்டபொம்மன்!

எல்லோரும் : வாழ்க!

காலாடி : வெல்வோம்!

எல்லோரும் : வெள்ளையரை......

(விகடகவி வருகின்றார்)

விகடகவி : சூரப்புலிகளே! சும்மா கொஞ்சம் நில்லுங்கள்!

காலாடி : புறப்பட்டபடை பொறு என்றால் பொறுக்குமா? புலவரே!

விகடகவி : எங்கேயப்பா? படை புறப்பட்டிருக்கிறது

வீரன் : அரசர் போகும் இடம் நோக்கி......

விகடகவி : உங்கள் அரசர் எங்கு நோக்கிப்போகின்றார்.

(வரிசையாக ஒருவரை ஒருவர் பார்த்து)

(தொடரும்)

—சிலம்பின் செல்வன்.

11th September 1954. SUPPLEMENT TO THENRAL REGD. NO. M. 6529

# சென்னை: கெயிட்டி, பிரட்வே

மற்றும் தமிழ் நாடெங்கும்




Edited and Published by Kannadhasan, Printed by U. Ramaswamy at Bharathi Printers, 119 Broadway Madras-1.